அரசு ஊழியர்

மாத இதழ்

2022 அக்டோபர்

மலர்:43 இதழ்:10

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆசிரியர் குழு:

மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்

வரைகலை: கார்ட்டூன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி

முகவரி:

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

அச்சகம்:

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200

தனி இதழ் : ரூ.20


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளே...


1. **இன்னும் கொஞ்சம் பொறுத்திருப்போம்! பொறுமையின் எல்லையில் சகித்திருப்போம்!** *தலைவர் மடல் ....4*
2. **மாநில பிரதிநிதித்துவப் பேரவை மற்றும் வட்ட, மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவையில் நமது ஸ்தாபனத்தை முன்னெடுத்துச் செல் உறுதி ஏற்போம்!** *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து....6*
3. **ஜாக்டோ -ஜியோ ஒருங்கிணைப்பாளரும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவருமான மு.அன்பரசு அவர்கள் மாநாட்டில் ஆற்றிய அறிமுக உரையிலிருந்து...** ....*10*
4. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (10.09.2022) சென்னை, தீவுத் திடலில் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ, "வாழ்வாதார நம்பிக்கை" மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரை:**..,....*11*
5. **கிராம சுகாதார செவிலியரின் சேவையும் பயன் பெறும் மக்களின் மன நிலையும்** ....,,,,,,...*16*
6. **பெண்ணுரிமை முழக்கமும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும்**....*18*
7. **வன்முறையை வேரறுப்போம் பெண்ணுரிமையை பாதுகாப்போம்** ......*23*
8. **அக்டோபர் 13 தியாகி சங்கரலிங்கனார் நினைவு நாள்**....*27*
9. **ஜேக்டோ - ஜியோ மாநாட்டு விளக்கக் கூட்டமும் பணிநிறைவு பாராட்டு விழாவும்** ....*29*
10. **முப்பெரும் விழா**....*31*

தலைவர் மடல்

# இன்னும் கொஞ்சம் பொறுத்திருப்போம்! பொறுமையின் எல்லையில் சகித்திருப்போம்!

ஒரு சரித்திர நிகழ்வு நடந்து முடிந்திருக்கிறது. ஆமாம் தோழர்களே ஜாக்டோ ஜியோ மாநாடு எழுச்சிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. வாழ்வாதார நம்பிக்கை என்னும் சொல் எத்தகைய அடர்த்தி வாய்ந்தது என்பது தமிழக முதல்வருக்கு புரிய வைக்கப்பட்டிருக்கிறது. அவர் தான் சொன்ன வார்த்தைகளை உறுதிமொழிகளை மறக்கவும் இல்லை மறுக்கவும் இல்லை. சிறிது காலம் ஆகும் என்கிறார். பொருளாதார எழுச்சி வந்து அதன்பிறகு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று அவர் கூறுவதில் நம்மில் பலபேர் நம்பவில்லை.

ஒருலட்சம் எண்ணிக்கைக்கு மேல் திரண்டிருந்த ஆசிரியர்கள், அரசுஊழியர்கள், அரசுப் பணியாளர்கள் மாநாட்டில் என்னை நம்பி இருங்கள். என்மீது நம்பிக்கையோடு இருங்கள் என்று கூறி இந்த அரசாங்கம் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களை புறக்கணித்து விடவில்லை, அரவணைத்துக் கொண்டிருக்கிறது என்பதை அழுத்தந்திருத்தமாக சொல்லிக்காட்டியிருக்கிறார் தமிழக முதல்வர்.

ஆணைகள் இடக்கூடிய இடத்தில் அவரும், ஆணைகளை நிறைவேற்றும் சேனைகளாக நாமும் இருக்கிறோம். அரசாங்கமும், அதிகாரிகளும் அரசு ஊழியர்களும் புரிந்துணர்வோடு இருந்தால் தான் மக்களுக்கான நலன்கள் முற்றிலுமாக சென்று சேரும் என்பதை தான் உணர்ந்து கொண்டிருப்பதாக தமிழக முதல்வர் அந்தக் கூட்டத்தின வாயிலாக உணர்த்தியிருக்கிறார்.

தமிழகத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ள முதல்வர் தனக்கிருக்கும் அரசுப் பணிகளைஒதுக்கி வைத்துவிட்டு ஒரு மாநாட்டில் சுமார் இரண்டு மணிநேரம் அமர்ந்து நம்முடைய தீர்மானங்களை, வாழ்வாதார நம்பிக்கைகளை பொறுமையுடன் காதுகொடுத்து கேட்டு அவற்றுக்கெல்லாம் பதிலுரைக்கும் வகையில் மட்டுமல்ல ''உங்கள்நம்பிக்கைகள் வீண்போகாது.'' என்று நமது பத்தாண்டுகால கனவுகளுக்கு, காத்திருப்புகளுக்கு, நம்பிக்கைகளுக்கு உயிர்ப்பும் அளித்திருத்திருக்கிறார்.

நாம் எதிர்பார்த்தது போலவே மாநாட்டிற்கு வெள்ளம்போல் ஊழியர்களும் ஆசிரியர்களும் திரண்டு வந்திருந்தனர். கூட்டம் கூட்டுவதற்காக அவர்கள் வரவில்லை. மாநாட்டுப் பந்தலில் ஏதாவது அறிவிப்புகளை வெளியிடுவார் முதல்வர் என்ற எதிர்பார்ப்போடு வந்திருந்தார்கள் பெரும்பான்மையான அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஏதேனும் சில முக்கிய அறிவிப்புகளையேனும் முதல்வர் வெளியிடுவார் என்ற ஆவலோடு காத்திருந்தனர்.

ஆனால் முதல்வர் அவர்கள் எந்த ஒரு அறிவிப்பையும் வெளியிடாமல் உரையை முடித்து கொண்டது மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கு மட்டுமல்ல தங்களது அவரது அமைச்சர்களுக்கும் கூட ஏமாற்றமாகத்தான் இருந்தது. ஆனால் அதே சமயம் ''உங்களின் பத்தாண்டு கால கோரிக்கைகளை படிப்படியாக நிறைவேற்றுவதில் இருந்துநான் பின்வாங்கமாட்டேன்.''என்று முதல்வர் கூறிய வார்த்தைகள் அவரின் வாய்மையையும், நேர்மையையும் பறைசாற்றுவனவாக இருந்தன. அவை உண்மையா? உண்மையிலேயே அவர் ஆசிரியர்-அரசு ஊழியர்களுக்கு நிறைய செய்யவேண்டும் என்ற உறுதிப்பாட்டை கொண்டிருக்கிறாரா இல்லையா என்பதெல்லாம் இன்னும் சில

மாதங்களில் தெரிந்துவிடும். அந்த ஒரு காரணத்திற்காகவே நாம் அனைவரும் நாம் நம் பொறுமைகளை இன்னும் சில காலத்திற்கு கடைபிடிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

பொறுமை கடலினும் பெரிது என்பார்கள். இது பத்தாண்டு காலத்தையும் மிஞ்சிவிட்ட பொறுமை. பொறுமைக் கடலில் நாம் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம் என்பதே நிதர்சனம். எந்தவித வாழ்வாதார நம்பிக்கையும் இல்லாமல் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றிருக்கும் சுமார் 30000 ஊழியர்களுக்கு ஓய்வூதியம் என்ற வாழ்வாதாரம் கானல்நீராகவே போய்விடக்கூடாது என்பதற்காக நாம் நம் பொறுமைகளை சேமித்து வைக்க வேண்டியிருக்கிறது. இன்னும் கொஞ்சம் பொறுத்திருப்போம்.

சத்துணவு, அங்கன்வாடிஊழியர்களின் ஓய்வுக்குப் பிறகுவழங்கப்படக்கூடிய ரூ.2000 தொகை இன்று இருக்கக்கூடிய விலைவாசியில் அவர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக் குரியாக்கியுள்ளது. ஞிசிறப்புகால முறைஊதியம், வரையறுக்கப்படாத தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் பகுதிநேர ஊதியம் பெற்றுவரக்கூடிய ஊழியர்களின் நிலையும் கவலைக்கிடமாக உள்ளதையும் முதல்வரிடம் சொல்லியிருக்கிறோம். கோரிக்கை மனுக்களாக, தீர்மானங்களாக, பிரிதிநிதித்துவங்களாக.

ஆனால் அதேசமயம் நமது வாழ்வாதார கோரிக்கைளில் முதன்மையானதாகவும் முக்கியமானதாகவும் இருக்கக்கூடிய கோரிக்கைகளின் பேரில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் முதல்வரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அப்படி முன்னுரிமையின் அடிப்படையில் உரிமைகள் கிடைத்தால் பல ஊழியர்களின் குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை காத்துக்கொள்ளவழி கிடைக்கும் என்பதையும் அவரிடம் அடிக்கோடிட்டு தெரிவித்துள்ளோம்.

பொறுத்தவன் பூமி ஆள்வான் என்றொரு பழமொழி உண்டு. அதே சமயம் பொறுத்துக் கிடப்பவர்களின் பொறுமை கடலினும் பெரிது என்பதையும் பூமி ஆள்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற பழமொழியும் இங்கே நினைவுகூறத் தக்கதே. அரசு ஊழியர் திரண்டால் நாடு கொள்ளாது என்பதை நாம் ஏற்கெனவே சிலமுறை நிகழ்த்திக் காட்டியுள்ளோம். அது இன்னொரு முறை நிகழ்வதும் நிகழாமல் பார்த்துக் கொள்வதும் அரசாங்கத்தின் கைகளில் இருக்கிறது. பொறுத்தது போதும் பொங்கி எழு தோழா என்ற வார்த்தைகள் பொறுமைகளின் எல்லைகளில் கனன்று கொண்டிருப்பது இந்த அரசாங்கத்திற்கும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது. நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டிய கடைசி தருணங்களில் நாம் இருக்கிறோம். பொறுமைகளின் எல்லைகள் உடையாமல் இன்னும் கொஞ்சம்...கொஞ்சம் மட்டும் காத்திருப்போம்.

இது காத்திருப்பின் கடைசி தருணங்கள் -

இன்னும் கொஞ்சம் பொறுத்திருப்போம்!

பொறுமையின் எல்லையில் சகித்திருப்போம்! ●

## சூடா ஒரு கோப்பை சூப்

### செய்நன்றி இதுதானோ?

**கந்தையணிந்தோம்! – இரு**
**கையை விரித்தெங்கள்**
**மெய்யினைப் போர்த்தோம்**
**மொந்தையிற் கூழைப் – பலர்**
**மொய்த்துக் குடித்துப்**
**பசித்துக் கிடந்தோம்;**
**சந்தையில் மாடாய் – யாம்**
**சந்ததம் தங்கிட வீடுமில்லாமல்**
**சிந்தை மெலிந்தோம் – எங்கள்**
**சேவைக்கெலாம்**
**இது செய் நன்றிதானோ?**

**–பாரதிதாசன்**

# மாநில பிரதிநிதித்துவப் பேரவை மற்றும் வட்ட, மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவையில் நமது ஸ்தாபனத்தை முன்னெடுத்துச் செல் உறுதி ஏற்போம்!

*எங்கள் ஆட்சியாளர்கள் அதிகார வர்க்கத்தினருக்கு கூட்டல் கணக்கையும் எங்களுக்கு கழித்தல் கணக்கையும் மட்டுமே கற்றுத் தந்தார்கள்! -கந்தர்வன்*

தோழர்களே! தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அமைக்கப்பட்டு 38 ஆண்டுகள் முடிந்துள்ளது. அரசு ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான பல உரிமைகளை சிலபேர் தங்கள் சுயநலத்திற்காக சமரசம் செய்து கொண்டதன் எதிர் விளைவாக உருவானதுதான் இந்த இயக்கம். ஊழியர்களின் உரிமைகள் எதுவாயினும் அதை சமரசம் செய்து கொண்டு சகித்துப் போகாமல் போராடிப் பெற வேண்டும் என்று இலட்சிய நோக்கத்துடன் தொடங்கப்பட்டது தான் இந்த இயக்கம்.

3 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த ஸ்தாபனத்தின் செயல்பாடுகளை பரிசீலனை செய்வதற்கு மாநாடுகளும், ஆண்டுக்கு ஒரு முறை மாநில பிரதிநிதித்துப் பேரவையும் நடத்தி சங்கத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களை விரைவுபடுத்த வேண்டிய நடவடிக்கைகளை சிறப்பான செயல்பாடுகளின் மூலம் தோழர்களுக்கு பொறுப்புகள் வழங்கி மேலும் தாங்கள் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காகவும், சங்க உணர்வை, சங்க இருப்பை, சங்கம் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை ஊழியர்களும், நிர்வாகிகளும் மீண்டுமொரு முறை நினைவில் கொள்வதற்காக மாநில பிரதிநிதித்துவப் பேரவை தமிழகத்தின் தொழிற்சங்க நகரமாக திகழும் சேலத்தில் 2022, டிசபம்ர் 17ல் நடைபெற உள்ளது.

என்ன இலட்சிய நோக்கத்துடன் இந்த இயக்கம் துவங்கப்பட்டதோ, இந்த 38 ஆண்டுகளில் இந்த லட்சியத்திற்காக சமரசம் செய்து கொள்ளாமல் தொடர்ந்து ஊழியர்களின் உரிமைக்காக போராடி வருகிறது. நமது சங்கம் அரசு ஊழியர் மீதான உரிமைகள் மீது எந்த ஒரு அரசாங்கமும் ஏனோதானோவென்று முடிவு எடுத்துவிட முடியாதபடி ஊழியர்கள் தரப்பிலும் அவர்தம் உரிமைகளை கேட்பதும் போராட்டங்களை முன்னெடுத்து அதிகார வர்க்கத்திற்கு எதிராக வாதாடுவதுமான நடவடிக்கைகளில் மற்ற இயக்கங்களைவிட முன்னோடி இயக்கமாக நம் இயக்கம் விளங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை புறந்தள்ளிவிட்டு எந்த ஒரு அரசாங்கமும் ஊழியர் மீதான உரிமைகள் மீது கை வைத்துவிடவோ அல்லது கைவிரித்து விடவோ முடியாத அளவுக்கு அரசு ஊழியர்களின் பாதுகாப்பு கவசமாக, அரணாக இன்று ஒரு பெரும் இயக்கமாக இச்சங்கம் விளங்கி வருகிறது என்றால் அதற்குக் காரணம் நம்முடைய ஆசான் தோழர் எம்.ஆர். அப்பனும், அவர் வழிபின்பற்றிய ஆளுமை மிக்க தோழர்களின் அர்ப்பணிப்பு செயல்பாடுகளும், தொடர்ந்து நடத்திய போராட்டங்களும் விட்டுக்கொடுக்காத உரிமைகளும் தான்.

ஒரு இயக்கம் அல்லது அமைப்பு என்பது எப்படி இருக்க வேண்டும்? அது அதனுடைய ஒவ்வொரு உறுப்பினர்களிடமிருந்தும் உயிர் மூச்சாக இருக்க வேண்டும். அவ்வப்போது ஊழியர்கள் மனதிற்குள் ஒரு கவிதையைப்போல் மணம் பரப்ப வேண்டும். மீண்டும் அடுத்த கட்ட போராட்டத்துக்கான ஆயுதங்களுடன் காத்திருக்க வேண்டும். அதே நேரத்தில் நம் மனதில் அசாதாராணமான புதிய உத்திகளையும், கருத்துக்களையும் விதைக்க வேண்டும். நம்மைச்சுற்றி நிகழும் குழப்பம் நிறைந்த வருத்தமளிக்கக்கூடிய பரவசமான மாற்றங்களின் உண்மைக் காரணங்களை என்னவென்று தெரிந்துக்கொள்ளும் வகையில் அது நம் கண்களை திறக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் விட பெரும் மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் தேவையில்லாத துயரத்தை முடிவுக்குக் கொண்டு வரும் எதிர்காலம் ஒன்றின் முகவர்களாக மாற அது நம்மைத் தூண்ட

வேண்டும். தான் கொண்டிருக்கும் உண்மையான உரிமைகளை மீட்பதற்கான சாத்தியத்தை அனைவரும் உணர்வதற்கான உந்துதலை அது தரவேண்டும்.

நம்முடைய ஸ்தாபனம் இதையெல்லாம் ஊழியர்கள் மத்தியில் விதைத்துள்ளதா, சிந்தனையைத் தூண்டியுள்ளதா? சாதித்துள்ளதா? என்பதை இந்த அமைப்பின் செயல்பாடுகளிலிருந்தும் ஊழியர்களின் பங்களிப்பிலிருந்தும் அவரவர் செயல்பாடுகளுக்கேற்ப உணர்ந்து கொள்ளலாம்.

சேலத்தில் நடக்க இருக்கும் மாநில பிரதிநிதித்துவப் பேரவை நம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான உரிமைகளுக்காக மட்டும் அல்லாமல் மக்களுக்கான உரிமைகளை பெற்று தருவதற்காகவும் நம்முடைய ஸ்தாபனத்தை வலிமைப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்வோம். எனவே மேற்கூறிய ஸ்தாபன நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்வதில் முனைப்புடன் ஈடுபட்டு ஸ்தாபனத்தை வலுமிக்க அமைப்பாக மாற்ற இந்த மாநில பிரதநிதித்துவப் பேரவையில் உறுதி ஏற்போம். இயக்க நடவடிக்கைகளை இன்னும் பட்டை தீட்டி நடைபெற உள்ள வட்ட, மாவட்ட, மாநில பிரதிநிதித்துவப் பேரவைகளில் கீழ் கண்டவைகள் குறித்தும் அலசி ஆராய்வோம்.

1. மாநில செயற்குழு முடிவின்படி வட்டபேரவை, மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவைகளை குறிப்பிட்ட தேதிகளில் நடத்தி ஸ்தாபனத்தின் பலத்தினை உறுப்படுத்திடுவோம்.

2. 14ஆம் மாநில மாநாட்டில் அமைப்பு விதிகளின்படி மாநில முழுவதும் 1000 அலுவலக, வளாகக் கிளைகளை அமைத்து ஸ்தாபன பணிகளை முன்னெடுத்து சென்றுள்ளோமா என்பது குறித்து ஆராய்வோம்.

3. மாவட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் எல்லா மாவட்டங்களிலும் உறுப்பினர் சேர்க்கை இலக்கினை முடித்து விட்டோமா? அதுபோல் அரசு ஊழியர் மாத இதழ் சந்தா, எம்ப்ளாயீஸ் போரம் மாத இதழ் சந்தா போன்றவை இலக்கை எட்டவில்லை. என்பதை அவ்வப்போது ஞாபகப்படுத்தி மாவட்டங்களை தொய்வில்லாமல் எடுத்துச்செல்ல வேண்டிய பொறுப்பு யாருக்கானது என்பது குறித்து விவாதிப்போம்.

4. ஸ்தாபன நடவடிக்கைகளில் முக்கியமானதான அனைத்து வட்டக்கிளைகளும் உயிரோட்டத்துடன் சுயமாக செயல்படுவதை உறுதியும், உத்திரவாதமும் செய்துள்ளோமா? வட்ட, மாவட்ட, மாநில நிர்வாகிகள் அனைவரும் சங்கப் பணிகளில் முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் நம்மை ஈடுபடுத்தியுள்ளோமா? என்பதையும் விரிவாக விவாதிப்போம்.

சங்கப் பொறுப்புகளில் உள்ள நாம் அனைவரும் தலைமைப் பொறுப்புக்கான இலக்கணத்தோடு இருக்கிறோமா? ஸ்தாபன கடமைகளை நாம் ஒவ்வொருவரும் சரியாகச் செய்கிறோமா? சங்கத்தின் மீது பற்றுருதி, நேர்மை, அறிவும். ஆர்வம், துணிவு, பொறுப்புணர்வு, கட்டுப்பாடு, உறுப்பினர்களோடு பிணைப்பு ஆகியவைகளை நாம் கொண்டிருக்கிறோமா? ஊழியர்களுடைய உணர்வின் ஆழத்தையும், அனுபவங்களையும் சரியாக புரிந்து கொண்டு செயல்படுகிறோமா? செயல்படுகிறவர்கள், செயல்படாதவர்கள், ஆலோசனைகளை கேட்டு அடுத்த நிலைக்கு உயர்த்திக்கொள்வோமா? என்பது குறித்து விவாதிப்போம்.

மாநில செயற்குழுவின் முடிவுகளை அமல்படுத்துவதற்கும், மாநில சங்கத்தின் அன்றாடப் பணிகளை மேற்கொள்வதற்கும் நாம் நம்முடைய பங்களிப்பை எவ்வாறு செய்கிறோம் ? சங்கத்தில் யாரோ ஒரு சிலர் மட்டும் பொறுப்புகளை சுமப்பதும், மற்றவர்கள் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு பாராமுகமாக இருப்பதாகவும் வரக்கூடிய விமர்சனங்கள் குறித்து ஆராய்வோம்.

சங்கத்தில் முன்னோடி தோழர்கள் தங்களுக்கு பின்பு சங்கத்தை வழி நடத்தி செல்லக்கூடிய முணைப்பான தோழர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு போதிய பயிற்சிகள் அளித்திருக்கின்றனர். ஓய்வுபெறும் முன்னோடி தோழர்களின் காலத்திற்கும், சங்க அமைப்பு முன்னெடுத்துச் செல்லக்கூடிய நபர் இல்லாமல் ஸ்தாபனத்தில் வெற்றிடம் ஏற்பட்டுவிடாமல் இருக்க நாம் செய்ய

வேண்டியவைகள் குறித்து பரிசீலனை செய்வோம். சங்கம் நடத்துவது சவாலாக மாறியுள்ள இன்றைய சூழ்நிலையில் இருக்கும் உறுப்பினர்களை புதுப்பித்தல், புதிய உறுப்பினர்களை சேர்த்தல் போன்றவற்றில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்கிற யதார்த்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. தொடர்ந்து இயங்கங்களும், போராட்டங்களும் நமது ஸ்தாபன நடவடிக்கையை பின்னுக்கு தள்ளியிருக்கின்றன என்கிற கருத்தை நாம் ஏற்றுக்கொளவது குறித்தும், நமது முன்னோடிகளும் இது போன்ற போராட்ட காலங்களில் கூட ஸ்தாபன நடவடிக்கைகளை தொய்வின்றி செய்து வந்திருக்கின்றார்கள் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். எப்போதும் இல்லாத அளவுக்கு உறுப்பினர் சந்தா, புதுப்பித்தலாவது இருக்கட்டும். நாம் கடந்த ஆண்டில் ஏற்படுத்தியிருந்த இலக்கை எட்ட முடியாமல் போயிருக்கிறது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு 2020-2021 காலம் போராட்டங்களும், இயக்கங்களும் நிறைந்த காலமாக இருந்தது மட்டுமே இதற்கு காரணமாக சொல்வது சரியாகுமா? ஸ்தாபனம் உறுதியாகவும், அதன் உறுப்பினர்கள் குறையாமலும், புதிய உறுப்பினர்களை சேர்ப்பதில் சேர்ப்பதன் மூலமாகவும் தான் திடமான அமைப்பாக பரிணமிக்க முடியும். ஸ்தாபன நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தொய்வுகளுக்கான காரணங்களையும், அதை நிவர்த்தி செய்வதற்கான வழி முறைகளையும் காண வேண்டிய தருணம் குறித்து விவாதிப்போம்.

அரசுத்துறையில் உள்ள ஊழியர்களை புதிய ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் பழைய ஓய்வூதியம் பெறுபவர்கள் என்று இரு பிரிவாக பிரிந்து விட்டநிலையில் தற்போது பழைய ஓய்வூதியம் பெறுபவர்கள் ஓய்வு பெற்று செல்லச் செல்ல (மே 2022 இருபத்தைந்தாயிரம் பேர் ஓய்வு) புதிய ஓய்வூதியம் பெறுபவர்கள் அதிகமாகி வருகிறார்கள்.(6.22 லட்சம் பேர்) என்கிற யதார்த்தம். அனைவரும் உணரக்கூடியதே. ஆனால் புதிய ஓய்வூதியத் திட்டத்தை எதிர்ப்பதில் பழைய ஓய்வூதியத் திட்டத்தில் இருப்பவர்கள் காட்டும் அளவுக்கு புதிய ஓய்வூதிய திட்டத்தில் இருப்பவர்கள் ஆர்வம் காட்டவில்லை என்ற விமர்சனம் (தற்போது சற்று முன்னேற்றம் உள்ளது) மற்றும் புதிய ஓய்வூதியத் திட்டத்தில் இருப்பவர்களை போராட்டக் களத்திற்கு அழைத்துவர சங்க நிர்வாகிகளும், பொறுப்பாளர்களும் செய்யும் பணிகள் குறித்தும் விடை காண்போம்.

சமீப காலமாக புதிதாக அரசுப் பணிகளில் சேர்பவர்கள் சங்க உறுப்பினர்களாவும், சங்க நடவடிக்கைகளில் கலந்து கொள்வதும் மிக சொற்பமான அளவிலேயே உள்ளது. அவர்கள் சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு கொள்ளாமல் தடுக்கும் புறச்சூழ்நிலை என்ன என்பது குறித்தும் உண்மையிலேயே அவர்களுக்கு சங்கம் பற்றிய அறிதலும், புரிதலும் இல்லையா? அல்லது சங்க அமைப்பில் அவர்களை தங்களை ஈடுபடுத்திக்கொள்ள விரும்பவில்லையா? என்பது குறித்தும் ஆராய்வோம்.

அரசு துறைகளில் தனியார்மயமாக்கும் சித்திக் கமிட்டி அரசாணை வந்த பிறகு அதன் முதல் செயல்பாடு கருவூல கணக்குத்துறையில் ஆரம்பித்திருக்கிறது. கருவூல கணக்குத்துறையை கணினி மயமாக்குவதாக கூறிக் கொண்டு அதை தனியார் நிறுவனத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது. இதன் மூலம் கருவூல கணக்குத்துறை என்ற ஒரு துறையே மூடப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அறிவியல் தொழில்நுட்பங்களை நாம் மறுக்கவில்லை. அதே சமயம் அவற்றை அரசு ஊழியர்களுக்கு போதிய பயிற்சி அளித்து அவர்களை பணி செய்ய அரசு விருப்பமில்லை என்பதுடன், அரசுத்துறை வேலைகளை ஒவ்வொன்றாக ஒழித்துக்கட்ட அரசு முடிவு செய்து விட்டதன் தொடக்கம் தான் இது. இன்று கருவூலக் கணக்குத்துறைக்கு நிகழ்ந்தது. நாளைக்கு வேறு துறைக்கு நிகழலாம். ஒரு நாள் அது நாம் இருக்கும் துறைக்கும் வரலாம். இந்த போக்கு அரசாங்கததை கார்ப்பரேட் மயமாக்கப் பார்க்கும் வன்மத்தை வேரறுக்க நாம் என்ன செய்யலாம் என்பது குறித்தும், எவ்வாறான தொடர் இயக்கங்களை மேற்கொள்ளலாம் என்பது குறித்தும் விவாதிப்போம்.

வகுப்புவாதம், மதவாதம், வன்முறை, சாதியம், ஆணாதிக்கம் போன்றவற்றை ஒன்றிய அரசாங்கத்தின் ஆசிர்வாதத்தோடு நிகழ்த்தும் வேலைகளை ஒரு கூட்டம் செய்து

வருகிறது. சிறுபான்மையினருக்கு எதிரான சிந்தனைப்போக்கும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்துள்ளன. முக்கிய பொறுப்புகளில் உள்ளவர்களே ஆபத்தான வகையில் பேசுகின்றனர். இது குறித்தும் விவாதிப்போம். அரசின் வருவாயில் 70 சதவீதம் அரசு ஊழியர்களுக்கு செலவு செய்து வருகிறோம் என்று அமைச்சர்கள் தொடர்ந்து பொய்ப்பிரச்சாரம் செய்து போராட்டங்களை ஒடுக்கப் பார்க்கிறார்கள். இவர்களுக்கு தக்க பதிலடி வழங்க விவாதிப்போம்.

வாட்ஸ் ஆப் என்கிற வரம் சங்கத்தின் தகவல் பரிமாற்றங்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது. ஸ்தாபன வளர்ச்சிக்கு பயன்படுத்தி தேவையற்ற பதிவுகளையும் தவிர்த்து சங்கத்தின் பலத்தினை பலப்படுத்துவோம்.

புறச்சூழ்நிலைகளை திறமையாக சந்தித்து முறியடித்திட ஊழியர்களின் தயார் நிலையை நாம் ஏற்படுத்தி இருகிறோமா? பாதுகாப்பான சவால்களை சந்திக்கும் இந்த நிலையை உருவாக்கவும், வளர்த்தெடுக்கவும் நம்முடைய அன்றாட செயல்பாடுகளில் மாற்றம் தேவையா? இல்லையா? ஆம் என்றால் என்ன மாதிரியான மாற்றம்? தேவையில்லை என்றால் அதற்கான காரணம் என்ன என்பது குறித்தும் ஆராய்வோம்.

இன்றைய ஒன்றிய அரசின், மாநில அரசுகளில் நவீன உலகமய, தாராளமய, தனியார் மயக் கொள்கைகளின் அமலாக்கத்தின் விளைவாக நாம் சந்தித்துவரும் சவால்கள் மேலும் சந்திக்க வேண்டிய சவால்களை உறுதியுடன் எதிர்கொள்ள ஊழியர்களை சந்தித்து அவர்களை இயக்கங்களில் பங்கு எடுக்க வைப்பது போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோமா என்பது குறித்தும் விவாதித்து முடிவெடுப்போம்.

ஏற்கனவே உறுதி ஏற்றுக்கொண்டபடி அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மகளிர் துணைக் குழுக்களை செயல்படுத்துவதை உறுதி செய்வதில் நாம் ஆற்றிய பங்கு குறித்து விவாதிப்போம். சங்க ஜனநாயக செயல்பாடுகளை உத்திரவாதப்படுத்தியிருக்கிறோமா ? எப்படி என்பது குறித்து அலசுவோம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உத்திரவாதப்படுத்தப்பட்டுள்ள போராடும் உரிமை இன்று ஒன்றிய அரசு தொழிலாளர் நலச் சட்டங்களை ரத்து செய்து ஊழியர்களின் உரிமைகள் அபகரிப்படும் சூழல் உருவாகியுள்ளது. நீதிமன்றங்களும் கார்ப்பரேட் கம்பெனிகளின் ஏஜெண்டாக மாறிவிட்டனவோ என்கிற அச்ச உணர்வு எழுகிறது. இன்றும் ஞாபகம் இருக்கிறது. விவசாயிகள் போராட்டம், தூத்துக்குடி போராட்டம் உலகெங்கிலும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ள நிலையில் ஒன்றிய அரசும், நீதிமன்றமும் மக்களுக்கான நியாயங்களை உறுதி செய்ய ஓடோடி வரத் தவறியுள்ளன. 728 விவசாயிகள் இறந்த பிறகு ஒரு வருத்தச் செய்தியை போடாத பிரதமரும் தன்னுடைய மக்களுக்கு நேர்ந்த துன்பத்தை தவிர நேரில் சென்று கூட முன்வராதவர்கள் மக்கள் நலனின் அறங்காவலர்கள் என்று கூறிக்கொள்கிறார்கள். இந்நிலையில் தான் சென்னை -சேலம் பசுமை வழிச்சாலையை எதிர்க்கும் கிராம மக்கள் மற்றும் விவசாயிகள் போராடினால் நீதி மன்றம் சொல்கிறது, நல்ல திட்டங்களை மக்கள் எதிர்க்கக்கூடாது என்று கூறும் நீதி மன்றங்கள் மக்களிடம் கருத்துக்களை கேட்காமல் போடவுள்ள சாலையை எதற்காக எதிர்க்கிறார்கள் என்பதை கூட அறியக்கூட நீதிமன்றம் விருப்பப்படாத சூழ்நிலையில் நாம் கையிலெடுக்கும் போராட்டங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து விரிவாக விவாதிப்போம்.

பயிற்சி பட்டறைகளும் போராட்ட அணுகுமுறைகளும் ஒரு தொழிற்சங்கத்திற்கு இன்றியமையாத குணங்கள் என்பது நம்முடைய பார்வை என்பது குறித்து பேசுவோம். நமது உறுப்பினர்களின், ஊழியர்களின், பொதுமக்களின் மனங்களை வென்றிட நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

இப்படிப்பட்ட பல்வேறு விதமான கேள்விகளுக்கு விடை காணும் வகையில் வட்டப்பேரவை, மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவையிலும் மற்றும் சேலத்தில் 2022 டிசம்பர் 17ஆம் தேதியில் நடைபெறும் மாநில பிரதிநிதித்துவப் பேரவையிலும் விவாதித்து விடை காண்போம்! ●



# ஜாக்டோ –ஜியோ ஒருங்கிணைப்பாளரும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவருமான மு.அன்பரசு அவர்கள் மாநாட்டில் ஆற்றிய அறிமுக உரையிலிருந்து...

சென்னை தீவுத்திடலில் 10.09.2022ஆம் தேதி நடைபெற்ற ஜாக்டோ ஜியோ வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டில் தமிழக முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்று

ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவருமான திரு.மு.அன்பரசு அவர்கள் ஆற்றிய அறிமுக உரையிலிருந்து...

ஜாக்டோ ஜியோவின் ஆசிரியர் - அரசு ஊழியர் - அரசுப் பணியாளர் வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டிற்கு வருகை தந்திருப்பதன் மூலம் மேற்கில் மறையும் சூரியன் கிழக்கில் நிச்சயம் உதிப்பான் என்ற மாற்றமுடியாத நம்பிக்கையை உறுதி படுத்தியிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே வருக! வருக!

எதிர்கட்சியாய் இருந்தபோது நாங்கள் அழைத்த கூட்டங்களுக்கெல்லாம் வந்து எங்களுக்கு வழ்வாதார நம்பிக்கையூட்டினீர்கள், அந்த நம்பிக்கை நீர்த்துப் போயிருக்குமா என்ற ஐயப்பாட்டை... ''நான் ஆளுங்கட்சியாக இருந்தாலும் எதிர்கட்சியாக இருந்தாலும் எப்போதும் உங்களுடன்தான் இருப்பேன்.'' என்று தப்பாமல் நிரூபித்திருக்கும் முத்துவேலர் கருணாநிதி கண்டெடுத்த முத்துச்சரமே, மாண்புமிகு முதல்வர் அவர்களே உங்கள் வருகை நல்வருகை ஆகுக.

வாழ்வாதார நம்பிக்கை மாநாடு என்று இந்த மாநாட்டுக்கு நாங்கள் பெயர் வைக்கக் காரணம், கடந்த ஆட்சியில் எங்கள் வாழ்வுரிமைகளுக்காக போராடும் போது நீங்கள் எங்களுடைய போராட்டங்களுக்கும், கோரிக்கைகளுக்கும் உறுதுணையாக நின்றீர்கள். உங்கள் காலம் மட்டுமல்ல பொதுவாகவே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்த காலங்களில் எல்லாம் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் பல சமயம் உரிமையோடு வாதாடியும் சில சமயம் சமரசம் செய்துகொள்ளாமல் போராடியும் பல உரிமைகளை பெற்றுள்ளோம் என்றால் அது மிகையல்ல. இதே தீவுத்திடலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முத்தமிழ் அறிஞருமான கலைஞர் திரு.கருணாநிதி அவர்கள் அரசு ஊழியர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு எங்கள் உரிமைகளைகளை நிறைவேற்றிக் கொடுத்துள்ளதையும் இந்நேரத்தில் நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் வாழ்வாதார நம்பிக்கைகள் பலவற்றை அன்றைய காலகட்டங்களில் தங்களின் தகப்பனார் உயிர்ப்பித்தது போல நீங்களும் எங்கள் வாழ்வாதார நம்பிக்கை கனவுகளை நினைவுகளாக்குவீர்கள் என்று நிச்சயம் நம்புகிறோம். கடந்த சட்டமன்றத் தேர்தலில் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகள் பல பிரிவினருக்கும் நிறைவேற்றப்பட்டுவிட்ட நிலையில் இன்றுவரையிலும் காத்திருப்பில் வைக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் ஆசிரியர் அரசு ஊழியர் மற்றும் அரசுப் பணியாளர் சம்பந்தப்பட்ட வாக்குறுதிகள் தான் என்றாலும் நாங்கள் இந்த அரசாங்கத்தின் நிலையறிந்து பொறுப்புணர்ந்து இதுநாள் வரையிலும் பொறுமையோடு காத்திருந்து வருகிறோம். எங்கள் நீண்ட காத்திருப்பின் கடைசி கணங்களாக இந்த வாழ்வாதார நம்பிக்கை மாநாடு இருக்க வேண்டும், நிச்சயம் இருக்கும் என்றே நம்புகிறோம். கஜானா காலி பாத்திரமாக இருக்கலாம். ஆனால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் அரசுப் பணியாளர்களும் இந்த அரசாங்கத்தின் நம்பிக்கைப் பாத்திரங்களாக இன்றுவரை இருந்து வருகிறோம். இனியும் இருப்போம். ஏனென்றால் நீங்கள் சொன்னதைச் செய்பவர், சொன்ன சொல் காப்பவர் என்ற திடமான நம்பிக்கை எங்களுக்கு எப்போதும் உள்ளது!

அதனால்

நீ வருவாய்..! நீ தருவாய்..!

நின்னைத் தவிர வேறேது

எங்களுக்கு நிரந்தர வருவாய்..? என்று

உங்களை இங்கே திரண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் சார்பில் வரவேற்று மகிழ்கிறேன். வாழ்க தமிழ். வெல்க தமிழ்மண். ●

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (10.09.2022) சென்னை , தீவுத் திடலில் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ , "வாழ்வாதார நம்பிக்கை" மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரை:




ஜாக்டோ -ஜியோவின் ஆசிரியர், அரசு ஊழியர், அரசுப் பணியாளர் ஆகியோருடைய வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டிலே பங்கேற்று உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களே!

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அருமை தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களே!

துறை அமைச்சர்

ஜாக்டோ - ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்களாக பொறுப்பேற்று பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய

திரு.செல்வம் திரு.குமார் திரு.மாயவன் திரு. ஆறுமுகம் திரு. முத்துசாமி திரு. மயில் பெருமாள் சாமிதாஸ் திரு.வின்சன் திரு. பால்ராஜ் திரு.காந்திராஜ் திரு. தியாகராஜன் திரு. சேகர் திரு.சங்கர்பெருமாள் திரு. முத்துக்குமாரசாமி, திரு. செல்வராஜ் திரு. வெங்கடேசன் திரு.அன்பரசு திரு.தியோடர் ராபின்சன் திரு. சண்முகநாதன் உள்ளிட்ட பல்வேறு அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் நிர்வாகிகளே!

அரசு பணியாளர்களே ! ஆசிரியப் பெருமக்களே!

வெள்ளம் போல் திரண்டிருக்கக்கூடிய அன்பிற்கினிய சகோதரர்களே, சகோதரிகளே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே !

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் தீவுத்திடலில் கூடியிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் தனித்தீவுகள் அல்ல. கோட்டைக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய உங்கள் தீவு இருக்கிறது. கோட்டையையும் உள்ளடக்கியதுதான் உங்கள் தீவு. எனவே, நானும் உங்களில் ஒருவனாக அந்த உணர்வோடு இந்த மாநாட்டில், பெருமையோடு, மகிழ்ச்சியோடு, பூரிப்போடு, புளங்காகித உணர்வோடு இந்த மேடையிலே நான் நின்று கொண்டிருக்கிறேன்.

நீங்கள் அரசு ஊழியர்கள், நான் மக்கள் ஊழியன். அரசும், அரசியலும் இரண்டறக் கலந்தது. இதனை யாராலும் பிரிக்க முடியாது. அந்த உணர்வோடுதான் நான் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்கள் மாநாட்டில் அரசியல் பேசக்கூடாது என்று நினைத்தாலும், அரசு ஊழியர் மாநாட்டில் அரசியல் பேசாமல் வேற எங்கே பேசுவது என்பதும் என்னுடைய எண்ணமாக அமைந்திருக்கிறது. நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தான வெற்றியைப் பெற்று ஆறாவது முறையாக ஆட்சியைப் பிடித்தது. அப்படி ஆட்சியைப் பிடிப்பதற்கு

அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் நீங்கள்தான் காரணம். அத்தகைய நன்றி உணர்ச்சியோடு உங்கள் முன்னாள் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

இந்த மாநாட்டுக்கான அழைப்பிதழில் ஒரு கருத்தை வெளியிட்டு இருக்கிறீர்கள். 'நமது மாநாட்டுக்கு வரும் முதலமைச்சரை வரவேற்போம். நம்முடைய ஆதரவு முதல்வரின் அரசுக்கு எப்போதும் உண்டு என்பதை மீண்டும் உறுதி செய்வோம்.' என்று கூறி இருக்கிறீர்கள். இதற்காகவே, ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர் அனைவருக்கும், உயர்மட்டக் குழு உறுப்பினர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**நீங்கள் அதிகமான எதிர்பார்ப்போடு வந்திருப்பீர்கள். நானும், உங்களது எதிர்பார்ப்பை நிறைவு செய்ய வேண்டியவனாக இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததும், உங்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவோம் என்று தேர்தல் நேரத்தில் நான் வாக்குறுதி தந்தது உண்மைதான். நான் அதை மறுக்கவில்லை! மறைக்கவில்லை! மறக்கவும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு, உங்களது நியாயமான கோரிக்கைகளை நிச்சயம் நிறைவேற்றித் தரும் என்று இப்போதும் நான் உறுதி அளிக்கிறேன்.** இடைப்பட்ட காலத்தில் எத்தனையோ தாமதங்கள் ஏற்பட்டது என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்த மாநாட்டு அழைப்பிதழின் கடைசிப் பக்கத்திலே, நீங்களே அச்சிட்டு வெளியிட்டிருக்கறீர்கள்.

திமுக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது இருந்த கடுமையான கொரோனா தொற்றுச் சூழலாலும், அரசுக்குக் கடுமையான நிதிப்பற்றாக்குறை இருந்ததாலும், நம்முடைய கோரிக்கைகளைத் தள்ளி வைத்திருந்ததுடன், நிதிநிலைமை சரியானதும் அவற்றைப் படிப்படியாக நிறைவேற்றுவதாக முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருந்தார் என்று நீங்களே தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள்.

அதாவது, நான் அளிக்க வேண்டிய விளக்கத்தையும் நீங்களே சொல்லிவிட்டீர்கள். நான் சொல்லவேண்டிய பதிலை, நீங்களே சொல்லிவிட்டீர்கள். அதனால்தான் நாம் இருவரும் வேறு வேறு அல்ல என்று நான் குறிப்பிட்டேன். நாம் இருவரும் ஒரே மாதிரியாகவே சிந்திக்கிறோம். அதே நேரத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான உறுதிமொழிகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வந்தன என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

கடந்த ஆட்சியின்போது, நீங்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து போராட்டம் நடத்தியதற்காக, பல வழிகளில் பழிவாங்கப்பட்டீர்கள். அந்த நடவடிக்கைகளைக் கழக அரசு அமைந்ததும், முற்றிலுமாக ரத்து செய்தோம் என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

பணிமாறுதல் செய்யப்பட்டவர்களுக்கு பழைய இடங்களில் பணி வழங்கியும், காவல்துறையால் போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற்றும், நடவடிக்கையை எடுத்தோம். போராட்டக் காலத்தை பணிக்காலமாக வரைமுறைப்படுத்தித் தந்தோம்.

கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில், கடும் நிதிநெருக்கடி இருந்தபோதும், மற்ற மாநிலங்களைப்போல் அல்லாமல், தமிழ்நாட்டின் அரசு அலுவலர்களுக்குத் தாமதமின்றி முழுமையாக ஊதியம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான அகவிலைப்படி, 01-01-2022 முதல், 17 விழுக்காட்டிலிருந்து 31 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்பட்டது.

மேலும், 75-வது சுதந்திர தினத்தன்று, மாநில அரசுப்பணியாளர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான அகவிலைப்படி, 01-07-2022 முதல் 31 விழுக்காட்டிலிருந்து 34 விழுக்காடாக அடிப்படை ஊதியத்தில் உயர்த்தி வழங்கப்பட்டது.

உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குவதற்காக மாநில அரசிற்கு இந்த

நிதியாண்டு சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதலாகச் செலவினம் ஏற்படும் என்பதை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள்.

2022-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ' மற்றும் D' பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்கள் / அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகையாக ரூ.500/- வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டத்தின் கீழ், ஓய்வூதியர்களுக்கு, அவர்கள் இறக்கும் நேர்வில், அவரது துணைவர் நியமனதாரருக்கு ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின்கீழ் அரசு அலுவலர்கள் பணிக் காலத்தில் இறக்கும் நேர்வில் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆதரவு அளிக்கும் வகையில் வழங்கப்பட்டு வரும் ஒட்டுமொத்தத் தொகையானது ரூபாய் 3 இலட்சத்திலிருந்து ரூபாய் 5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் உள்ள உள்ளாட்சித் துறை, அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள் முதலியனவற்றில் பணிபுரியக்கூடிய பணியாளர்களுக்கு இது நீட்டிக்கப்பட்டுள்ளது.

கோவிட் நோய்த்தொற்றால் பணியிடை மரணமடைந்த 409 முன்களப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 98 கோடியே 45 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் - 2021, பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் வழியாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் அரசு பணியாளர்கள் மற்றும் தகுதியுள்ள அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கும் 2021-2025 வரை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) கட்டணமில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்தில், சிலநோய்கள் மற்றும் அதற்கு உண்டான உயர் சிகிச்சையினைக் கருத்தில் கொண்டு ரூபாய் பத்து இலட்சம் வரை மருத்துவ சிகிச்சை பெற உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

உயிர்காக்கும் அவசரத் தன்மை கொண்ட அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும், சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் மேற்கொண்டால் ஆகக்கூடிய செலவில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் 75 விழுக்காடு அளவிற்கு மருத்துவச் செலவினம் மீள வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கோவிட்-19 நோய்த் தொற்றிற்கான சிகிச்சையை சிறப்பு சிகிச்சைகளுக்கான பட்டியலில் சேர்த்து ரூ.10 லட்சம் வரை கட்டணமில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- புதிய மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ், அரசு ஊழியர்களைச் சார்ந்து வாழும் மகன்கள் மற்றும் மகள்கள் அவர்களது வயது வரம்பினைக் கருத்தில் கொள்ளாமல் இத்திட்டத்தின்கீழ் சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2021-இன் கீழ் 01.07.2021 முதல் 31.08.2022 வரை 75 ஆயிரத்து 574 பயனாளிகள் 349 கோடியே 63 லட்சம் ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

இரண்டிற்கும் குறைவான குழந்தைகள் உள்ள மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தப்படும் என்ற தேர்தல் அறிக்கையின் வாக்குறுதியை, இந்த அரசு 1.7.2021 முதல் செயல்படுத்தியது.

அரசின் நலத்திட்டங்களையும், பல்வேறு சேவைகளையும், மக்களிடையே சிறப்பாகக் கொண்டு சேரும் விதமாக, 01-05-2021 முதல் 31-08-2022 வரை 10 ஆயிரத்து 338 புதிய பணியிடங்கள் பல்வேறு துறைகளில் அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இப்படி பல்வேறு திட்டங்கள், சலுகைகள், உதவிகள் செய்து வழங்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் கடந்த ஓராண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட செயல்கள்

ஆகும். இதில் நாங்கள் அளித்த உறுதிமொழிகள் மட்டுமல்ல, அளிக்காத உறுதிமொழிகளும் இருக்கின்றன. சொன்னதை மட்டுமல்ல - சொல்லாததையும் செய்து தருவான் இந்த ஸ்டாலின் என்பதற்கு எடுத்துக்காட்டான உறுதிமொழிகள் இவை.

**வாழ்வாதார நம்பிக்கை மாநாடு என்று இந்த மாநாட்டுக்கு பெயர் சூட்டியிருக்கிறீர்கள். நான் குறிப்பிட்ட அனைத்துமே அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையானவை தான் என்பதை நீங்கள் அனைவரும் ஒப்புக் கொள்வீர்கள் என்று நான் உளமாற நம்புகிறேன். அதனால்தான், நீங்கள் அழைத்ததும், இந்த மாநாட்டிற்கு உடனடியாக தேதியை வழங்கி, மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு, நான்**

**இங்கு வருகை தந்துள்ளேன். இப்போதும் நான் என்ன அறிவிப்பேன் என்ற மிகுந்த எதிர்பார்ப்போடு நீங்கள் காத்திருப்பீர்கள்.**

**இந்த மாநாட்டுக்கு வரும்போதே, உங்களது கோரிக்கையை சிலவற்றை நிறைவேற்றும் கோப்புக்களுக்கு ஒப்புதல் அளித்துவிட்டுத்தான் இந்த மேடைக்கு வந்திருக்கிறேன். நன்றாக கவனிக்க வேண்டும், உங்களது கோரிக்கைகளை சிலவற்றை நிறைவேற்றும் கோப்புகளுக்கு ஒப்புதல் அளித்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன். 15 மாதங்கள் தான் ஆகியிருக்கிறது. 10 வருடங்கள் பட்ட கஷ்டத்தை படிப்படியாக நிறைவேற்றுவோம், அதில் எந்தவித சந்தேகம் உங்களுக்கு இருக்க வேண்டிய அவசியம் கிடையாது.**

முதலாவதாக, அனைத்து வகையான, தற்காலிக பகுதிநேர பணியில் இருக்கும் சுமார் 16 ஆயிரம் ஆசிரியர்களும், பிற பணியாளர்களும், 60 வயது வரை தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கப்படுகிறது.

அடுத்ததாக, பல்லாண்டுகளாக பணிமாறுதலின்றி இருக்கக்கூடிய இப்பணியாளர்களுக்கு அவர்தம் விருப்பத்திற்கேற்ப, இணைய வழியில் ஒளிவுமறைவற்ற இடமாறுதல் கலந்தாய்வு அக்டோபர் 15 முதல் நடத்தப்படும்.

தமிழகத்தில் பல்லாண்டுகளாகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்த பள்ளிக்கல்வித் துறையின் நிருவாகக் கட்டமைப்பு, மறுசீரமைப்பு என்ற பெயரில் அரசாணை எண். 101 வாயிலாக 18-5-2018 அன்று மாற்றியமைக்கப்பட்டது. ஆசிரியர்கள், சங்கங்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் இந்நிருவாக முறை அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்த மறு சீரமைப்பில் இருந்த பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி, இதனைக் களைய வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும், ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், அரசாணை எண் 151 வாயிலாக உரிய உத்தரவுகள், 9-9-2022 அன்று நான் பிறப்பித்திருக்கிறேன்.

இதன் வாயிலாக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும், தொடக்கக் கல்விக்கென மாவட்ட அளவிலான அலுவலர் பணியிடம் புதிதாகக் கிடைக்கப் பெறுவதுடன், தனியார் பள்ளிகளை நிருவகிக்க தனியாக மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடமும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளின் நீண்டநாள் கோரிக்கையான, ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வருவதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்தோடு முடிந்துவிடப் போவது இல்லை. வருங்காலங்களில் இன்னும் பல அறிவிப்புகள் வரும். அரசின் நிதிநிலை சீராகச் சீராக மக்கள் நலனுக்கான அறிவிப்புகள் வந்து கொண்டேதான் இருக்கும்.

மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து என்பது மிகப்பெரிய நலத்திட்டம். கோடிக்கணக்கான மகளிர் இதன் மூலம் பயனடைகிறார்கள். இருந்தாலும் இதனால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.1520 கோடி வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

பள்ளிப் பிள்ளைகளுக்கான சத்துணவுத் திட்டத்துக்கு ரூ.1949 கோடி ஆண்டுக்கு செலவாகிறது.

இந்த நிலையில் காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தையும், வருகிற பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் 15-ஆம் தேதியில் இருந்து நான் தொடங்கி வைக்க இருக்கிறேன்.

கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஐந்து பவுனுக்கு குறைவான நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இவற்றின் மூலமாக பல லட்சம் மக்கள் பயனடைகிறார்கள் என்று இருந்தாலும், இன்னொரு பக்கத்தில் அரசின் வருவாய் சுருங்கிவிடவும் செய்கிறது.

அரசாங்கத்தின் கருவூலத்தில் பல்லாயிரம் கோடிக்குப் பணத்தைச் சேர்க்கவேண்டும் என்பது எங்கள் இலக்கு அல்ல. நான் நினைக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பணம் இருக்கவேண்டும் என்று தான் நினைக்கிறோம். அப்படி இருக்கிறதா என்றால் இல்லை. அதனை உருவாக்க முடியுமா? என்றால் நிச்சயமாக முடியும். அப்படி நிதிநிர்வாக மேலாண்மையை மிகச்சரியாக நிர்வகித்து வருகிறோம். அதனால்தான் மற்ற மாநிலங்களைவிட அனைத்துத் துறைகளிலும் முன்னோக்கிச் சென்று கொண்டு இருக்கிறோம்.

இந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாயில் 52.3 விழுக்காடு வளர்ச்சியை அடைந்துள்ளது. இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை வெளியிட்ட புள்ளி விபரங்களின்படி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த முதல் காலாண்டில் (ஏப்ரல் - ஜூன்) வளர்ச்சியை அடைந்துள்ளோம்.

ஏராளமான தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் முதலீடு செய்ய ஆர்வத்துடன் முன் வருகிறார்கள். இதன் மூலமாக தமிழகத்தில் முதலீடுகள் பெருகி, வளர்ச்சியும் பெருகி வருகிறது. இவை முழுமையான வளர்ச்சியாக மாறும்போது, அனைவரது ஆசையும் நிறைவேறும். அனைவரது கனவும் நிறைவேற்றப்படும்.

**உங்களது குறைகள் எதுவாக இருந்தாலும், உங்களது துறை அமைச்சரிடம் முறையிடலாம். அவர்கள், உங்கள் நட்போடு அணுகுமுறையை கொண்டிருப்பார்கள். அவர்களிடம் உங்கள் கோரிக்கையை தெரிவித்தால், உறுதியாக அது என்னுடைய கவனத்திற்கு அப்போதைக்கப்போது வந்து சேரும். அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படும்.** இன்று இந்த மாநாட்டிற்காக நாளேடுகளில், நீங்கள் அளித்திருக்கக்கூடிய விளம்பரத்தில் எங்கள் ஒற்றை நம்பிக்கையே என்று பாசத்தோடு குறிப்பிட்டு இருக்கிறீர்கள். அந்த நம்பிக்கைக்கு நான் என்றைக்கும் பாத்திரமாக இருப்பேன். அதில் யாருக்கும் எந்தவித சந்தேகமும் வேண்டாம். உங்களுடைய நம்பிக்கை நிச்சயம் வீண்போகாது. எப்படி தலைவர் கலைஞர் அவர்கள் உங்களுக்காக, பல திட்டங்களைத் தீட்டி, உங்கள் வாழ்விலே வசந்தத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்களோ, அதை நானும் ஏற்றுக்கொண்டு அதனை எந்நாளும் காப்பாற்றுவேன். இதனை ஏதோ ஒரு முதலமைச்சராக இருந்து சொல்கிறேன் என்று நீங்கள் கருதவேண்டிய அவசியம் இல்லை. உங்களில் நானும் ஒருவன் என்ற இந்த நட்புணர்வோடு இந்த நேரத்தில் தெரிவித்து, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல பத்தாண்டுகளாக இந்த நாட்டிலே சீரழிந்து போயிருக்கக்கூடிய நிலைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். நிதிநிலைமை எந்த சூழலில் இருக்கிறது என்பதும் உங்களுக்குப் புரியும். இருந்தாலும், நாம் ஆட்சிக்கு வந்தபிறகு சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். **ஆகவே நீங்கள் சொன்னதை நிச்சயமாக, உறுதியாக, நான் தொடக்கத்திலே சொன்னேன். இந்த வெற்றி உங்களால் கிடைத்திருக்கக்கூடிய வெற்றி, இந்த ஆட்சி உங்களால் உருவாக்கப்பட்ட ஆட்சி. அப்படிப்பட்ட ஆட்சியை உருவாக்கியிருக்கக்கூடிய உங்களுக்கு என்றைக்கும் நாங்கள் பக்கபலமாக இருப்போம்**

எதைப்பற்றியும் நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. உங்களுக்கு என்றைக்கும் துணை நிற்போம் என்ற உறுதியை தெரிவித்து இந்த மாநாட்டிலே, உங்களை எல்லாம் சந்தித்து உரையாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்,

நன்றி! வணக்கம்! ●

# கிராம சுகாதார செவிலியரின் சேவையும் பயன் பெறும் மக்களின் மன நிலையும்

**- சி.பரமேஸ்வரி**

தமிழகத்தில் கிராம புறங்களில் மக்களின் உடல் நலம்,மன நலத்தை பேணிகாப்பதில் கருவறை முதல் கல்லறை வரை மக்களின் நலமே தன் நலம் என்று மக்களோடு மக்களாக சேவை மனப்பான்மையோடு. பணி செய்பவர்கள் கிராம சுகாதார செவிலியர்கள். மக்களும் கிராம சுகாதார செவிலியர்களை தனது குடும்பத்தின் ஒரு நபராகவே கருதி அக்கா,அம்மா என்ற உறவின் மன நிலையோடு பழகுவார்கள். அக்கா(கிராம சுகாதார செவிலியர்) சொன்னால்தான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செல்வேன் என்ற மன நிலையில் மக்கள் இருந்தார்கள்.அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செல்லவோ அல்லது அங்கு சென்று மருத்துவர் பரிசோதனை முடித்து . மேல் பரிந்துரை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தாலோ, என் அக்காவை கேட்டு விட்டு அவர் போகச் சொன்னால் தான் போவேன் என்று கூறுவார்கள். கிராம சுகாதார செவிலியர்கள் மீது அளப்பறிய பற்றுடன் இருந்த பொதுமக்கள் கடந்த 2015ஆம் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட PICME VERSION -2 விற்கு பிறகு கிராம சுகாதார செவிலியர்களை எதிரியாக பார்க்கும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு விட்டார்கள். காரணம் அரசு வழங்கும் மரு. முத்துலெட்சுமி ரெட்டி உதவித் தொகை யும் PICME VERSION-2 ம் ஆகும்.கர்ப்பிணித் தாய்மார்களை இணைய தளத்தில் பதிவு செய்து அக்கர்ப்பிணிக்கு கர்ப்பகால பராமரிப்பு அனைத்தும் வழங்குவதே கிராம சுகாதார செவிலியர்களின் பணி ஆகும்.ஆனால் PICME VERSION -2 ஒரு கர்ப்பிணியை இணைய தளத்தில் பதிவு செய்ய 2மணி நேரம் ஆகும். அதிலும் server பிரச்சினை ஆதார் பதிவு செய்வதில் பிரச்சினை என பல பிரச்சினைகளை எதிர்கொண்டு அக்கர்ப்பிணியை பல சிரமங்களுக்கு மத்தியில் பதிவு செய்த பிறகு பயனாளிக்கு பணம் முறையாக கிடைக்கிறதா? என்றால் அதற்கு பதில் கேள்வி குறி தான் (?). அரசு கர்ப்பிணிகளுக்கு வழங்கும் நிதி உதவித் தொகைக்கும் கிராம சுகாதார செவிலியருக்கும் எந்த வித நேரடி தொடர்பும் இல்லை. ஆனால் பயனாளிக்கு பணப்பலன் கிடைக்க வில்லை என்றால் உயர் பதவியில் இருப்பவர்கள் கிராம சுகாதார செவிலியர்களை நோக்கி கையை காட்டுகிறார்கள். இதனால் கடந்த சில வருடங்களாக PICME VERSION -2, MLR க்குகிராம சுகாதார செவிலியர்களை மக்கள் எதிரிகளாக பார்க்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இத்தகைய சூழலில் கடந்த 24.09.2022 அன்று மரு. முத்து லெட்சுமி ரெட்டி நிதி உதவித் தொகை கிடைக்கப் பெறாத காரணத்தால் நீலகிரி மாவட்டம் குந்தலாடி கிராமம் துணை சுகாதார நிலையத்தில் பணியாற்றும் கிராம சுகாதார செவிலியர் ஜெகதீஸ்வரியை பணியில் இருக்கும் போது சமூக விரோதிகள் தாக்கினார்கள். கிராம சுகாதார செவிலியர் மிகவும் மோசமாக காயமடைந்த நிலையில் அவரை காப்பாற்ற உடனடியாக பந்தலூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக உதகை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வழிகாட்டுதலும் ஜெகதீஸ்வரி கிராம சுகாதார செவிலியரை மிக மோசமாக தாக்கிய சமூக விரோதிகளை காவல் துறை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று 26.09.2022 அன்று நீலகிரி மாவட்டம் நெலாக்கோட்டை அரசு மேம்படுத்தப்பட்ட

சுகாதார நிலையத்தின் முன்பு தமிழ் நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் சார்பில் காவல்துறையின் அடக்கு முறைகளையும் எதிர் கொண்டு கண்டன ஆர்ப்பாட்டம் தலைவர் ஏ.பி.பிரபாவதி தலைமையில் நடைபெற்றது.

தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் நீலகிரி மாவட்ட தலைவர் தோழர் கே.எச் சலீம் கண்டன ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து கண்டன உரையாற்றினார்.

கூடலூர் வட்டக்கிளை செயலாளர் தோழர் சிவபெருமாள் பந்தலூர் வட்டக்கிளை செயலாளர் ரவிச்சந்திரன், துணைத் தலைவர் மருதாச்சலம், கிராம சுகாதார செவிலியர் சங்கம் மாநில செயலாளர் மகேஸ்வரி, நீலகிரி மாவட்ட கிராம சுகாதார செவிலியர் சங்கம் செயலாளர் விஜயநிர்மலா, சாந்தி கலா ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

தமிழ் நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கம் மாநிலத் தலைவர் சி.பரமேஸ்வரி இந்த தாக்குதலுக்கு காரணம் மக்களின் தவறான புரிதலும், அரசின் நிதிஉதவி திட்டமான MLR ஆகும். தமிழ்நாடு அரசு கர்ப்பிணிகளுக்கு வழங்கும் நிதி உதவித் தொகையை வரவேற்கிறோம். ஆனால் மக்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை நிதியை வழங்குவதற்கென்று செயல்படும் துறைக்கு வழங்க உத்தரவிடவேண்டும். அப்போதுதான் கிராம சுகாதார செவிலியர்கள் தங்களது பணியான தாய் சேய் நலப் பணியை மிக சிறப்பாக செயல்படுத்த முடியும் என்று தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம். அரசுப்பணியில் தனது கடமையாற்றிக்கொண்டிருந்த (on duty ) கிராம சுகாதார செவிலியரை ஒரு பெண் ஊழியர் என்றும் பாராமல் கடுமையாக தாக்கிய சமூக விரோதிகளை காவல் துறை உடனடியாக கைது செய்ய வேண்டும் இல்லை என்றால் மாநில அளவில் போராட்டங்கள் நடத்தப்படும் என்று கூறி கண்டன ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தார்.பத்மா மாவட்ட பொருளாளர் நன்றி கூறினார்.

அதை தொடர்ந்து 29.09.2022 வரை காவல் துறை எந்த வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் 29.09.2022 அன்று காலை 10மணிக்கு மரியாதைக்குரிய நீலகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் பொது சுகாதார துறை துணை இயக்குனருக்கும் காவல்துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லை யென்றால் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்து மாநில அளவில் போராட்டம் நடத்தப்படும் தெரிவித்து சங்கம் சார்பில் கடிதம் கொடுக்கப்பட்டது. அத்தோடு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கிராம சுகாதார செவிலியரை நேரில் சென்று நலம் விசாரிக்க பட்டது. தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கமும், தமிழ் நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கமும் எப்போதும் சகோதரிக்கு துணையாக நிற்போம் என்று மனதளவில் தைரியம் அளிக்கப்பட்டது.

கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் தொடர் நடவடிக்கையால் கிராம சுகாதார செவிலியர் ஜெகதீஸ்வரியை தாக்கிய நபர்களிடையே அச்சத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்தி உள்ளது. நமது ஒன்றுபட்ட உறுதியான போராட்டத்தின் மூலம் சமூக விரோதிகள் 29.09.2022 அன்று மாலையே நீதி மன்றத்தில் சரண்டர் ஆனார்கள். போராட்டம் ஒன்றே அனைத்திற்கும் இறுதியான தீர்வாகும் என்பதை அனைவருக்கும் எடுத்துக்காட்டும் நிகழ்வாக உள்ளது.

கிராம சுகாதார செவிலியரை தாக்கிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த 02.10.2022 அன்று காணொளி மூலம் மாநில நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.அக்கூட்டத்தில் எதிர் வரும் 06.10.2022 நீலகிரி மாவட்டம் துணை இயக்குனர் அலுவலகம்முன்பு தமிழ் நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் அனைத்து மாநில ,மாவட்ட நிர்வாகிகளும், முன்னனி ஊழியர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு ஜெகதீஸ்வரி கிராம சுகாதார செவிலியரை தாக்கிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி பெருந்திரளாக சென்று மரியாதைக்குரிய நீலகிரி மாவட்ட ஆட்சியரிடம் பெருந்திரள் முறையீடு வழங்குவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. தாக்குதலுக்குள்ளான கிராம சுகாதார செவிலியர் ஜெகதீஸ்வரிக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டங்கள் தொடரும்...... ●

# பெண்ணுரிமை முழக்கமும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும்

**- தெ.வாசுகி**

தமிழ் நாட்டில் அரசு ஊழியர் இயக்கம் தோன்றிய காலந்தொட்டு பெண் அரசு ஊழியர்களை அணிதிரட்டி அவர்களுக்கு சங்கப்பயிற்சி அளித்து பிரிநிதித்துவம் அளிக்காத நிலைதான் இருந்தது. பெண்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இயக்கப்பணிகளில் ஈடுபடுவதும், தொடர்ந்து இயக்கப்பணிகளில் ஈடுபடாமல் இருந்து வந்த நிலையில் தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம் தொடங்கப்பட்ட பின்னர்தான் பெண் அரசு ஊழியர்களை அணிதிரட்டி அவர்களுக்கென தனி மாநாடு நடத்தி அவர்களுடைய பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என முதல் மாநில மாநாட்டில் விவாதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அதன்படி மகளிர் சிறப்பு மாநாடுகள் 1989ல் சென்னையிலும், 1997 மதுரையிலும், 2005ல் சென்னையிலும், 2007ஈரோட்டிலும், 2022ல் கிருஷ்ணகிரியிலும் நடைபெற்றுள்ளது. தமிழ்நாடு ஊழியர் இயக்க வரலாற்றில் முதல் முறையாக தோழர் மல்லிகா பத்மினி தலைமையில் 1500க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்ட மகளிர் மாநாட்டில் தோழர் எம்,ஆர் அப்பன் நிறைவுறையாற்றியபோது பெண் அரசு ஊழியர்களை அணிதிரட்டவேண்டும் அவர்களுடைய திறமைகளை வெளிக்கொணரவேண்டும் என்றும் அவர்களை அறிவாற்றல் மிகுந்த தலைவர்களாக வளர்த்தெடுக்கவேண்டும் அவர்களுடைய ப்ரச்சினைகளில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்றும் தனது கனவு நிறைவேறும் வண்ணம் இம்மாநாடு அமைந்ததாகவும் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். சமீபத்தில் கிருஷ்ணகிரியில் 2022 ஆகஸ்ட் மாதம் 13 அன்று நடைபெற்ற மாநாட்டில் சிறப்புகள் செப்டம்பர் 2022 நமது அரசு ஊழியர் சிறப்பிதழாக வெளியிடப்பட்டாலும் ஒரு நாளில் நடைபெற்ற மாநாட்டின் சிறப்பு நூறாண்டுகள் நிலைக்கும் வண்ணம் அமைந்ததுதான் தனிச் சிறப்பு.

இம்மாநாட்டில் கிடைத்த மிப்பெரிய சாதனையாக நாம் பார்க்க வேண்டியது அனைத்து மாவட்டங்களிலுருந்தும் இளம் பெண் பிரதிநதிகள் நமது தமிழ்நாடு அரசு ஊழியர் மகளிர் மாநில மாநாட்டிற்கு வந்திருந்து தங்கள் மாநாட்டு அனுபவத்தை பதிவு செய்திருப்பதென்பது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமெனும் பெருங்கடலில் கிடைக்கப்பெற்ற முத்துக்களை காண்பதுபோல் அமைந்துள்ளது. மேலும் வரவேற்பு நிறைவுக் கூட்டத்தில் அரசு துறையில் பெண்கள் பணிபுரியும் அலுவலகங்களிலும், குடும்பத்திலும் சந்திக்கும் இன்னல்களையும், பிரச்சினைகளையும் பெண்பிரிதிநிதிகளின் விவரப் படிவத்தின் மூலம் அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். மகளிர் மாநாட்டின் மூலம் தான் பெண்கள்எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிக்கொணர முடிந்தது. அனைத்துதுறைகளிலும் உள்ள ஆற்றல்மிக்க பெண்கள் அரசு ஊழியர் இயக்கத்திற்கு கிடைத்தது இம்மாநாட்டிற்கு கிடைத்த வெற்றியாக மாநிலத் தலைவர் மு. அன்பரசு தனது நிறைவுரையில் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார். மேலும் கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் தோழர் சந்திரன் பேசுகையில் மகளிர் மாநில மாநாட்டில் அரசு ஊழியர் சங்கத்திற்கு சிறந்த பெண்வீராங்கணைகள் அமைவது நமது சாதனையாக கருதினாலும் இம்மகளிர்மாநாட்டில் தொண்டர்களாக பணிபுரிந்த ஆணாதிக்க சிந்தனையற்ற பாலின சமத்துவம் பேணும் இளம் ஆண் வீரர்கள் கிடைத்ததை கிருஷ்ணகிரி மாவட்டம் பெருமையாக கருதுவதாகவும் அதுவும் இம்மாநாட்டின் வெற்றியின் ஒரு பகுதியெனவும்

பேசியது உற்சாகமூட்டக்கூடிய செய்தியாக அமைந்தது.

இம்மாநாட்டில் பங்கேற்ற பெண் பிரதிநிதிகள் விவரப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள பல கருத்துக்கள் இம்மாநாட்டை வாழ்த்தியிருந்தாலும், பெண்களின் உள்ளக்கிடக்கை வெளிப்படுத்திய துணிச்சல் மிக்க கருத்துக்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. நமது ஸ்தாபனத்தை மேலும் செழுமைப்படுத்திடவும், பாலின சமத்துவமின்மையும், குடும்ப வன்முறையும் ஒழியும் வரை பெண்ணுரிமைக்காக குரல் எழுப்பக்கூடிய எழுச்சிமிக்க மகளிர் மாநாடுகளை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடர்ந்து நடத்திட ஊக்கமும் உற்சாகமும் அளிக்கக்கூடிய மகளிர் மாநில மாநாட்டின் பிரதிநிதி விவரப் படிவத்தில் பதிவு செய்யப்பட்ட பெண் பிரதிநிதகளின் முத்து முத்தான கருத்துக்ககிளை தொகுத்து வழங்குவதில் பெருமை கொள்கிறோம்.

“முதல் முறையாக கலந்து கொள்கிறேன். ரொம்ப சந்தோஷாக உள்ளது. பல அனுபவங்களை கற்றுக்கொள்ள எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது”

“மகளிருக்கு முழு உரிமை கிடைக்கும் வரை இதுபோன்ற மாநாடு தொடர வேண்டும். அனைத்து மகளிரையும் வெளியே வர இது நல்ல விழிப்புணர்வை ஏற்படுதும் மகளிரின் சிறப்புக்களை .இந்த மாநாட்டின் மூலம் சமூகத்திற்கு வெளிப்படுத்தும் நல்ல நிகழ்வு இதன் மூலம் அனைத்து மகளிரின் பிரச்சனைகளை வெளிக்கொண்டுவர முன்வருவார்கள். இதுபோன்ற மாநாடு மேலும் வளர வாழ்த்துக்கள்”

“வருடந்தோறும் மகளிர் மாநில மாநாடு நடத்தலாம். அனைவருடனும் நட்புறவை வளர்க்கவும், நமது செயல்பாடுகளை மேம்படுத்க்கொள்ளவும் பயிற்சி பட்டறையாக அமையும் நமது தன்னம்பிக்கையை வளர்க்கும் மகத்தான நாள்”

“மிக்க மகிழ்ச்சி, பெண்களாகிய எங்களுக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம்“

“மகளிர்களுக்கு தனியாக சங்கம் இருப்பது வரவேற்கத்தக்கது மாதம் ஒரு முறை கருத்தரங்கம், அரசியல் வகுப்புகள் நடத்தினால் சிறப்பாக இருக்கும்“

“மாநில அளவில் மகளிர் மாநாடு நடைபெறும்போது மகளிர் வட்டம் பெரிதாகிறது. கருத்துக்கள் பகிர்வும், தன்னம்பிக்கையும் தைரியமும் வளர்கிறது. அடுத்தகட்ட முன்னேற்றத்திற்கான ஆர்வம் ஏற்படுகிறது“

“பெண்களுக்கான தைரியத்தையும், மன உறுதியையும் தூண்டிவிடுகிறது“

“ஆண்களுக்கு நிகராக பெண்களை முன்னேற்றப்பாதையில் அரசு ஊழியர் சங்கம் அழைத்துச் செல்ல வழி வகுக்கின்றது“.

“மாநாடு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. அலுவலக மனஉளைச்சலிலிருந்து இன்று மகளிர் மாநில மாநாட்டில் கலந்து கொண்டது மனதிற்கு மகிழ்ச்சியாக உள்ளது.“

“மாநாட்டிற்காக அனைத்து மகளிரும் வெளியில் வருவதும் ஏராளமான பெண்களை ஒரே இடத்தில் பார்ப்பதும் பெருமையாக உள்ளது“

“இந்த மாநாடு மிகவும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. பெண் அடிமையில் இருந்து பெண்கள் வெளியில் வரவேண்டும் அவர்களுக்கான உரிமைகளை அவர்களே போராடி வாங்குவது மிகவும் சிறப்பு“

“நாடு முழுவதும் உள்ள அனைத்து வட்ட கிளைகளிலும் உள்ள மகளிர் பிரச்சினைகளை மாநில மையத்திற்கு கொண்டு வரும்போது மாநில நிர்வாகிகளின் சேவை சக ஊழியர்கள் அனைவருக்கும் செய்து கொடுக்கும் பாங்கு மிகச் சிறப்பு“

“இந்த மகளிர் மாநில மாநாடு மிகவும் பயனுள்ளது, பெண்களை உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்துகின்றது. ஒரு பெண் உயர்ந்தால் குடும்பம், தெரு, வார்டு, மாவட்டம் , மாநிலம் உயரும்.“

“பெண்களை பாதுகாக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மகளிர் நலனை மேம்படுத்த இதுபோன்ற தனித்துவ மகளிர் மாநாட்டினை கையில் எடுத்தது மிகச் சிறப்பு “

“பெண்கள் இன்னும் துணிச்சலாக எப்படி செயல்பட வேண்டும் என்பதையும் எதற்கும் பயப்படும் அவசியம் இல்லை என்பதையும் இன்னும் ஆழமாக தெரிந்துகொண்டேன்“

“மகளிர் மாநில மாநாடு பிச்சர் (picture) “உன்னால் முடியும் தோழி” என்ற ஒரு வரி சிறையிருப்பில் தகர்த்தெரிந்து வெளிவா என உணர்வை ஏற்படுத்துகிறது“

“மகளிர் மாநில மாநாடு அறிவுப்பூர்வமாகவும் மகளிர் விழிப்புடனும் தைரியமாகவும் சிந்தித்து முடிவு எடுக்கணும் கோழைகளாக இருக்கக் கூடாது, ஜான்சி ராணி போல வீராங்கனைகளாகவும் அன்னை தெரெசா போல வும் வாழவேண்டும்“

“மௌனங்களால் வார்க்கப்பட்ட கற்பக விருட்சம்பெண்கள் விழிப்புடனும் திறமையுடனும் துணிவுடனும் எல்லா இடங்களிலும் செயல்படவேண்டும்.“

“மிகவும் அருமையாக இருந்ததது பெண்களுக்கான பிரச்சிணைகளை தீர்ப்பதற்கும் தன்னம்பிக்கையாக பெண்கள் செயல் படுவதற்கும் மகளிர் இயக்கம் இருப்பது மிகவும் மகிழ்ச்சி தரக்கூடியதாக இருந்தது“

மகளிர் மாநாட்டில் மகளிரின் சுதந்திரத்தை முழுமையாக அறிந்து கொண்டேன்“

“பெண்கள் மீதான மதிப்பையும் அவர்களின் உணர்வுகளையும் மேலோங்க செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கி கொடுத்து அரசுஊழியர் சங்க வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் படைத்துள்ளது,“

“பெண்களுக்கு நடக்கும் அநீதியை பார்த்துக்கொண்டிருக்காமல் தட்டிக்கேட்பது, பாதிக்கப்படட்ட பெண்களுக்கு நாம் உறுதுணையாக இருப்பது பற்றி அறிந்து கொண்டேன்“

“மகளிர் மாநில மாநாடு ஏற்பாடு செய்தது சிறப்பு,. இனி வருங்காலங்களில் விவாதிக்கப்படவேண்டிய பொருள் குறித்து மாவட்ட அளவில் விவரங்கள் பெற்று நடத்தினால் மிகவும் சிறப்பாக இருக்கும்“

“மகளிர் மாநில மாநாட்டில் பங்கேற்பதில் பெருமிதம் கொள்கிறேன் என்னால் முடிந்த அளவு சக மகளிர்க்கு தன்னம்பிக்கை அளிப்பேன் மகளிர் மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பலமாக இருந்து ப்ரச்சினைகளை சமாளிக்க வேண்டும்“

“மகளிர் மாநாடு நடத்துவது மிகமிக முக்கியமானது. இந்த சமுதாயத்தில் பெண்களுக்கான முழு சுதந்திரம் சட்ட ரீதியாக கொடுத்து இருந்தாலும் பெண்கள் அதை முழுமையாக பயன் பெறவில்லை பாலியல் தொல்லைளும் பெண்தானே என்ற அலட்சியப்போக்கும் அதிகமாக உள்ளது“

“பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பெண் உரிமைக்காகவும் குரல் கொடுக்கும் மாநாடு மகளிர் மாநில மாநாடு. பெண்குழந்தைகளின் பாது காப்பு பெண்களின் சுய கௌரவம் இவை அனைத்திற்கும் வழிகாட்டுதலாய் நின்று செயல்படும் அரசு ஊழியர் சங்கத்தின் தீர்மானம் மற்றும் கோரிக்கைகளை வென்றெடுக்கவேண்டும்“

“அவசியமாக மகளிர் மாநாடு தேவை. ஏனென்றால் பெண்களுக்கான விழிப்புணர்வு ஏற்படும் பலவிதமான மகளிரை பார்க்கும் போதுதான் தைரியமும் தன்னம்பிக்கையும் ஏற்படும்,“

“மகளிர் மாநில மாநாடு. என்பது பெண்களின் முன்னேற்றம் பெண்களின் சம உரிமை பெண்களின் ஒற்றுமையை நல்குவது. பெண்களின் பாதுகாப்பை விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது மேலும் இந்ததனை பெண்களை ஒரே இடத்தில் பார்க்கும் பொழுது மிகவும் சக்தியாகவும் சந்தோஷமாகவும் உள்ளது,“

“ ஆணுக்குப் பெண் சமமம் என்ற வாய்ச்சொல்லலோடு இல்லாமல் மகளிர் மாநாடு நடத்து மிகவும் பெருமையாக உள்ளது“

“என்னுடைய வாழ்நாளில் அரசு ஊழியர் ஆன பின்புதான் மகளிர் தினம் மகளிர் மாநாடு என கலந்து கொள்கிறேன். இதனால் இதன் மூலம் எனக்கு மனதைரியமும் மிகுந்த சந்தோஷதத்தை அளிக்கிறது“

“அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற காலம் மாறி நாம் மாநாடு நடத்தும் அளவிற்கு வளர்ந்துள்ளது மிக்க மகிழ்ச்சி மாநாட்டின் ஒவ்வொரு நிகழ்வும் மிக சிறப்பு. இம்மாநாட்டில் ஒரு பிரதிநிதியாக கலந்து கொள்ள வாய்ப்புக்கிடைத்தது மகிழ்ச்சி“

“சிறந்த அனுபவம், எதார்த்தமான துணிச்சல் பிறக்கிறது“

“சந்தோஷமாகவும், ஒற்றுமையவும் தனித்திறமை வாய்ந்ததாகவும், எதிலும் கலந்துகொள்ளும் மனப்பக்குவம் வாய்ந்ததாக இருந்தது“

“எந்த சங்க அமைப்பில் இல்லாத ஒரு சிறப்பான நிகழ்வு“

“பெண்கள் மத்தியில் அவர்களை மேலும் ஊக்குவிக்க இது போன்ற மாநாடுகள் தேவை“

“மகளிர் மாநாடு பெண்களுக்கு மிக அவசியம் இன்று வரை பெண்கள் மீது ஆண்களின் அடக்கு முறை இருந்து வருகிறது. இதுபோன்ற மாநாடுகளின் மூலம் பெண்களுக்கு தேவையான கருத்துக்களை தெரிந்துகொள்ள முடிகிறது“

“சரியான நேரத்தில், அருமையான ஒருங்கிணைப்பு. சிறப்பு அழைப்பாளர்களை அழைத்ததில் சரியான தேர்வு. சிறப்பான பாராட்டுக்கள்“

“மிகச் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. நான் முதன் முறையாக இக்கட்டடத்தில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைந்தேன் சங்கத்தில் எப்படி பேசவேண்டும் என்று தெரிந்து கொண்டேன்“

“பெண்களுக்கு விழிப்புணர்வு தேவை. பெண்கல்வி, பாலியல் துன்புறுத்தல், வரதட்சிணை கொடுமை பற்றி விளக்கம் தேவை“

“பெண்களின் பாதுகாப்பு, தைரியம், பெண்களின் அவலநிலை அவற்றை எப்படி எதிர் கொள்ளுவது? பெண்களின் தோழியாக அவளின் தாய் இருக்க வேண்டுமெனவும் உடல் நலத்தில் கவனம் ஆகியவற்றை தெரிந்துகொண்டோம். .இதுபோன்ற மாநாடுகள் நடத்த வேண்டும்“

“மகளிர் மாநில மாநாட்டில் பெண்கல்வி குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்பு, பாலியல் வன்கொடுமைகளை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கை, பெண்சிசு கொடையினை தவிர்த்தல், வரதட்சிணை கொடுமை போன்ற எண்ணற்ற விஷயங்களை தெரிந்துகொண்டேன் . இது மிகவும் பயனுள்ளதாக இருந்தது.“

“நான் காது மற்றும் பேச்சு குறைந்தவர்(Deaf & Dump) இன்று First time மகளிர் மாநாடு பற்றி பெருமைப்படுகிறேன் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.“

“அனைவரும் ஒன்றுபட்டு மகளிர்க்கு உண்டான திறமைகளை வெளிப்படுத்தக்கூடிய ஒரு அழகான அழியாத அனைவரும் படிக்கக்கூடிய நாவல் “

“மாநில மகளிர் மாநாடு புதிய அனுபவமாக இருந்தது. அதுமட்டுமல்லாமல் அனைவரும் ஒற்றுமையோடு செயல்படுவது மிகவும் மன நிம்மதியும், சந்தோஷத்தையும் கொடுத்தது இம்மாநாட்டின்மூலம் எனக்கு மிகவும் நல்ல நண்பர்கள் அறிமுகமானார்கள்“

“மாநாட்டில் பெண்களுக்கான சட்டங்கள் . Help line numbers பற்றி தெரிந்துகொண்டேன்“

“மகளிருக்கான உரிமைகளையும் உணர்வுகளையும் இதுபோன்ற மாநாடுகளின் மூலம் அனவருக்கும் உணர்த்துகின்றது.“

“மகளிர்கான உரிமையை பற்றியும், பாதுகாப்பு பற்றியும் போராட்டங்கள் பற்றியும், பெண்குழந்தைகளை கையாள்வது, அலுவலகங்களில் வேலைபார்ப்பது பற்றியும் தெளிவாகவும் அழகாகவும் கருத்துக்களை கேட்டறிந்தோம்.“

“வன்முறைகளை தடுப்பதற்கு சட்டங்கள் வழியாகவும், முற்போக்கு சிந்தனை வளர்ப்பதற்கு சங்கத்தின் மூலமாகவும் பிரச்சனைகளை சமாளிப்பது பற்றி தெளிவாக தெரிந்துகொண்டோம். இந்த மாநாடு எனக்கு புரிதல் கருத்தரங்கமாக இருந்தது“

“துறைவாரியாக பெண்கள் சந்திக்கும் அலுவலக ப்பிரச்சினைகள் தொடர்பாக அமர்வுகள் இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். இதுபோன்ற மகளிர் மாநாட்டை துறைவாரி சங்கங்கள் நடத்துவதற்கு இந்நிகழ்வு முன்னுதாரணமாக இருந்தது“

“பெண்களுக்கான விழிப்புணர்வு மாநாடு. பல துறைகளில் பணிபுரிகின்ற பெண்ஊழியர்களை சந்தித்தோம். “

“பெண்களின் உரிமைகளையும் கடமைகளையும் எடுத்துச்செல்லும் ஒரு மகத்தான மேடை, ஒரு பொன்னான வாய்ப்பு.

பல சிறந்த மங்கையர்களை காணும் ஒரு வாய்ப்பு உள்ள ஒரு சிறந்த மாநாடு ஆகும்.,"

"பெண்களுக்கான உரிமைகள் பற்றி அறிந்துகொள்ளவும், சட்டங்கள் பற்றி தெரிந்து கொள்ளவும், ஓர் அறிய மகளிர் மாநாடு பெண்களுக்காக குரல் கொடுக்க ஒரு மகத்தான நிகழ்வு"

"மகளிர் மாநாடு பெண்களுக்கான மாநாடு சிறப்பாக இருந்தது மாதர் சங்கத் தலைவி அவர்கள் பெண்களுக்கான அறிவுரை சிறப்பாக எடுத்துக் கூறினார் மேலும் சமூக நலத்துறை அலுவலர் அவர்கள் பாலியல் வன்கொடுமை சிறுவயது திருமணம் நாட்டு நடப்பு பற்றி விளக்கமாக எடுத்துக் கூறியது மிகவும் கருத்துள்ளதாக இருந்தது "

"மகளிர் மாநாடு சிறப்பாக இருந்ததது பெண் பாதுகாப்பதை பற்றி பேச்சு மூலம் ஒரு பயிற்சி முடித்ததுபோல் திருப்தியாக இருந்தது வாழ்த்துக்கள்"

"பார்வையில் நெருப்பும் முகத்தில் துணிச்சலையும் ஆடைகளில் ஒழுக்கத்தையும் வாழ்க்கையில் உண்மையையும் வார்த்தையில் உண்மையும் எனது பாதுகாப்பிற்கு நானே என மனதில் கற்றுக்கொடுத்தது மகளிர் மாநாடு"

"முதல் முறையாக பங்கேற்று பெண்களின் சாதனைகள் மற்றும் ஒற்றுமையை கண்டு மகிழ்ச்சியடைந்தேன்"

"இன்றைய காலகட்டத்தில் இந்த மகளிர் மாநாடு அவசியமானது. அதிலும் ஜாம்பவான்களான தோழர் உ.வாசுகி உள்ளிட்ட பல தோழர்கள் மகளிர் பிரச்சினை குறித்து பேசியது மிகச் சிறப்பு. மாநாடு எங்கள் மாவட்டத்தில் நடந்தது பெருமைக்குறியது"

"தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மகளிர் மாநாடு மிகவும் பயனுள்ளது.பெண்களுக்கு தைரியம் துணிச்சல் , பெண்பிள்ளைகளை தைரியம் கொடுத்து வளர்ப்பதற்கு பயனுள்ளதாக இருந்தது, மகளிர் ஒவ்வொருவரின் பேச்சும் மிக அருமை"

"அல்லும் பகலும் அயராது விழிகளாய் துன்பம் துயரம் தாங்கும் வேர்களாய்" என்ற வரிகள் மிகவும் எழச்சியாக இருந்தது முழுக்க முழுக்க பெண்களுக்கானது என்றபோது இன்னும் மேல்நோக்கி செல்ல வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது"

"பெண்களுக்கு தனித்தன்மையும் தனித்துவதையம் அவர்களை தெளிவோடு செயல்படவைக்கும் திறமையையும் அதிகரிக்க உதவும் உந்து சக்தியாய் அமைக்கின்றது"

"மிகச் சிறப்பான நிகழ்வு மேலும் இதனுடன் இனிவரும் காலங்களில் தொடர்பயிற்சி வகுப்புகள் (மூத்த தோழர்களுடன்) நடைபெற்றால் கூடுதல் தைரியம் பிறக்கும்"

மகளிர்க்கு தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் மற்றும் சவால்களையும் எதிர்கொள்ள தேவையான துணிச்சல் இந்த மாநாடு மூலம் அமையும். ●

# "பஞ்ச்"

மொரப்பா

## ஒரு சங்கம் வளர

**அ.** அதனுடைய விதிகளை அறிந்து கொள்ளுங்கள்

**ஆ.** ஆக்கம் தரும் ஆலோசனை கூறுங்கள்

**இ.** இழிவாக பிறரிடம் பேசாதீர்கள்

**ஈ.** ஈதல் சிறப்பென்று அளியுங்கள்

**உ.** உரிமை கோருமுன் கடமை செய்யுங்கள்

**ஊ.** ஊக்கமில்லையேல் ஒதுக்கி விடுங்கள்

**எ.** எடுத்து செய்வோரை இகழாதீர்கள்

**ஏ.** ஏற்கும் பதவியை பொறுப்புடன் வகியுங்கள்

**ஐ.** ஐயமிருந்தால் நேரில் தெளிவு பெறுங்கள்

**ஒ.** ஒரு கூட்டமும் தவறாதீர்கள்

**ஓ.** ஓய்வு கிடைக்கும்பொழுது சங்க நிர்வாகிகளுடன் கலந்துரையாடுங்கள்

**ஃ.** அஃது சங்கம் வளர ஏதுவாக இருக்கும்

# வன்முறையை வேரறுப்போம் பெண்ணுரிமையை பாதுகாப்போம்

**- மு.செல்வ ராணி**

ஜனநாயகம் சமத்துவம் பெண் விடுதலை புரட்சி பெண்ளே புதுமை பெண்களே போர்க்கள பட்டறையில் கூர் தீட்டி புறப்படுவோம் மாநாடு வெல்லட்டும் மாதரை இழிவு செய்யும் மடமை ஒழியட்டும் என்ற உணர்வோடு ஹஜனுறுஹ வின் 16வது மாநில மாநாடு கடலூரில் நடைபெற்ற பேரணி, பொது மாநாடு, கலை இரவுகள், பொது மாநாட்டில் சிறப்புரையாற்றிய உ. வாசுகி, அகில இந்திய துணைத் தலைவர் மரியம் தாவ்லே, அகில இந்திய பொதுச் செயலாளர் வீணாஜார்ஜ், கேரள சமூக நலத்துறை அமைச்சர் சுதா சுந்தரராஜ், அகில இந்திய துணைத் தலைவர் ரோகினி, த. மு.எ.க. மாநில துணைத் தலைவர் பாலபாரதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ். வாலண்டினா, மாநிலத் தலைவர் பி. சுகந்தி, பொதுச் செயலாளர் ஆர். மல்லிகா, மாநிலப் பொருளாளர் தலைமை : தேன்மொழி, வரவேற்புக்குழு செயலாளர் முன்னிலை : மல்லிகா, மா. தா. வரவேற்புரை : வி. குமரி மாநிலக்குழு நன்றியுரை : பி. மாதவி, மாவட்டச் செயலாளர் செம்டம்பர் 30, அக்டோபர் 1 வானமும் வசப்படும் என விரமங்கையரின் செயல்கள் என்பதைப்போல

காலை மணி கடலூரில் இறங்கி எம் வீர மங்கையரின் மாநாடு கடலுக்கு செல்ல ஆட்டோ ஏறும்போது ஆட்டோ ஓட்டுநர்(இளவயது தோழன்) அக்கா எங்கே செல்ல வேண்டும் என்று வினவியதற்கு தபால் நிலையம் அருகில் சுப்பராயலு திருமண மண்டபத்திற்கு என கூறியபோது அக்கா அந்த மண்டபத்திற்கு வந்த பெண்கள் பேரணியாக பல கிலோ மீட்டர் நடந்து வந்தது கடலூரையே திரும்பி பார்க்க வைத்தது. எதற்காக அக்கா இந்த மாநாடு என்றார்.

இன்றைய சூழலில் பொது துறை நிறுவனங்களை பாதுகாப்பது, புதிய கல்விக்கொள்கையின் ஆபத்து, குழந்தை திருமணம் தடுத்தல், கோவிட் தொற்றால் வேலையிழப்பு, உழைப்பாளி வர்க்கத்தை சுரண்டும் நுண் நிதி நிறுவனம் (ஆ¡உசடி கு¡யோஉந) அரசின் பாலி பணியிடங்களை நிரப்புதல், முதியோர் உதவித்தொகை தகுதி உள்ளவர்களுக்கு கிடைக்க செய்தல், மூவலூர் ராமாமிர்தம் திருமண உதவி திட்டத்தை திரும்ப நடைமுறைக்கு கொண்டு வருதல் போன்ற காரணங்களுக்காக எனக்கூறி பேசிக்கொண்டே வந்து இறங்கும்போது நம் அனைவரின் உரிமைக்காக நீங்கள் களத்தில் நிற்கும்போது எனது பங்காக இந்த ஆட்டோ வாடகை வேண்டாம் என மறுத்தபோது இது என் கடமையும் தம்பி எனக்கூறி வாடகையை கொடுக்கும் போதே நம் மநாட்டிற்கான வெற்றி நிர்ணயிக்கப்பட்டுவிட்டது என மெய் சிலிர்த்தேன்.

16வது அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க மாநாட்டில் பங்குபெற வாய்புபளித்த தலைமைக்கு மனதில் நன்றி கூறி அரங்கினுள் நுழைந்தபோது அங்கே ஒரு ராணுவப் பள்ளியின் மிடுக்கோட பிரதிநிதிகள் பதிவு நடந்து கொண்டு இருந்தது.

எட்டுத்திக்கில் இருந்து வந்த நினைவு ஜோதிகளை அந்தந்த மாவட்ட நிர்வாகிகள் நெஞ்சில் கனலோடு தொண்டை நரம்பு புடைக்க வீரகோஷத்தையும், நினைவுகளையும் போறிறிய கோஷங்களையும் விண்ணையும் அதிர செய்தனர்.

பின் நமக்கே உரித்தான நம் சங்க கொடி ஏற்றல் நிகழ்ச்சியும் தோழர் அமிர்தம், பின் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. '19 வயது இளம் பிரதிநிதியிலிருந்து 80 வயது மூத்த பிரதிநிதி வரை அனைவரும் அணி வகுத்த காட்சி கண்களுக்கு விருந்தாக அமைந்தது.

கம்பீரக்குரலோடு மாநிலத் தலைவர் தோழர் வாலண்டினா துவக்கி வைக்க நிகழ்ச்சிகள் இனிதே ஆரம்மாகியது.

வரவேற்புரை : கடலூர் முன்னாள் நரம்பியல்துறை தலைவர் மருத்துவர்

ரேணிகாதேவி எங்கள் மருத்துவ துறையும் உங்களை பார்த்து வியப்படைகிறது. நாங்களும் உங்களோடு கரம் கோர்க்கிறோம் என வரவேற்புரையாற்றினார்.

அஞ்சலி:தோழர் பிரமிளா அஞ்சலி உரையை வாசிக்க 2 நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது. அகில இந்திய பொது செயலாளர் தோழர் மரியம் தாவ்லே துவக்கவுரையாற்றினார்.இன்றைய அரசியல் சூழல், புலம் பெயர் தொழிலாளர்களுக்கு உதவுதல், ஏழைகளுக்கு உணவு பாதுகாப்பு, ரேஷன் அட்டை ரத்து, உணவு அட்டை சுருக்குதல், 4கோடி ரேஷன் அட்டை மறததல், அத்தியாவசிய பொருள் ரேஷன் கடையில் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றின் அவசியத்தை எடுத்துக்கூறினார்.மேலும் ஏழை மக்களின் உழைப்பை பணக்காரர்களின் சொத்தாக மாற்றப்படுகிறது என்று கூறினார்.

அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்திறகு 23 மாநிலங்களில் 1 கோடி உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.போதையற்ற தமிழகம் வேண்டி 9 நாட்கள் நடைபெற்ற நடை பயணத்தை பாராட்டினார். உண்மைகளை உறக்க பேச தான் மாநாடு என்றார். சுளுளு, க்ஷதுஞ உண்மை முகத்தை மக்களிடம் தோலுரித்து காட்ட வேண்டும் என்றார். அதற்கு சமீபத்திய உதாரணம் பாண்டிச்சேரி என்று கூறினார்.

கிராமப்புற பெண்களின் வேலைவாய்ப்பினை 100 நாள் வேலைத் திட்டத்தில் 40 நாட்களுக்குமேல் வேலை இருப்பதில்லை. அந்நிலை மாற்ற வேண்டும் என்றார்.

ஆந்திராவில் கோவிலில் மதம் சார்பான பரப்புதல், ஈரானில் மாஷா அமினி சமூக குற்றவாளிகளால் கொல்லப்படுவதால் எல்லா பெண்களும் போராட்ட களத்திற்கு வந்ததை ஹிஜாப் உடையை எதிர்த்ததை பாலஸ்தீனம், இஸ்ரேல் நாடுகளின் சுதந்திரம் ஆணாதிக்க சிந்தனையிலிருந்து விடுபடுவதை பேசினார்.

அக்டோபர்-8ல் பிரேசிலில் பெண்கள் போராட்டம், வேலை, பொருளாதார சுதந்திரம், முதலாளித்துவ சுரண்டல் போன்றவற்றை கூறி எதிர்காலத்தில் முதலாளித்துவத்தை எதிர்க்க வலுவான கட்டமைப்பு வேண்டும் எனக்கூறினார்.

கியூh : சமீபத்தில் குடும்ப சம்பந்தமான புதிய சட்டம் கொண்டு வந்து இருக்கிறது.

வரவேற்புக்குழு தலைவர் கடலூர் மாமன்ற தலைவர் சுந்தரிராஜா பிரமிப்பாக பாராட்சி உங்களிடம் இல்லையே என்று ஏங்குவதாக நம்மிடம் அத்துணை அரசியல்களையும் கற்றுக்கொள்வதாக வருகிற காலத்தில் நடைபெறுகிற பாலின சமதுதுவம் மாரத்தான் போட்டியில் கலந்த கொள்கிற அனைவருக்கும் காலை உணவு (சுமார் 4000பேர்) வழங்குவதாக உறுதியளித்து சென்றார். தோழர் பாலபாரதியின் பேச்சு தன்னை கவர்ந்ததாக மகிழ்வுடன் கூறினார்.

பொதுச்செயலாளர் சுகந்தி : 5 வருட செயல் அறிக்கையை ஒரு மணி நேரத்தில் நேர்த்தியாக பதிவிட்டார்.

நடை பயணம், அர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், வழக்குகள், தீர்ப்புகள், நஷ்டஈடு பெற்று தந்தது, குடும்பங்களுக்கு ஆதரவளித்தது போன்ற அனைத்தையும் பதிவிட்டார்.

சமீபத்தில் இலவச பேருந்து(ஓசிபஸ்) மருத்துவர்கள் போராடினால் சங்கத்தின் தேவைக்காக என அமைச்சர் பெருமக்கள் பேசியதை விளாசி தள்ளினார். உக்ரைன் மக்கள் உணவிற்கு குறைவாகவும், ஆயுதத்திற்கு நிறைய செலவிடுகின்றது என்றார். இந்த கொரோனா பெருந்தொற்று காலத்தில் கூட சீனா 10 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்டிருக்கிறது என்றார். பாலஸ்தீனம், இஸ்ரேல் தாக்குதல் அதில் இளம் பெண்கள் குழந்தைகள் உயிரிழப்பையும், கொலம்பியா ஜனாதிபதி தேர்தலில் 40 சதவீதம் இடதுசாரி வேட்பாளர்கள், அங்கு 10 லட்சம் மக்களக்கு(வெனிசுலா) இலவச வீடு கட்டி கொடுத்தது, பெண்களுக்கு குடும்பத்தில் ஜனநாயக விடுதலை, கியூபா மருத்துவத்தில் உலகிற்கு உதவியது.

இயற்கை வளம் மிகந்த இலங்கை பொருளாதார கொள்கையால் உணவிற்கு தடுமாறியது, பி. ஜே.பி., ஆர்.எஸ்.எஸ்.ன் மனுதர்மம் 24சதவீதம் வேலையில்லா திண்டாட்டம், குழந்தை திருமணம், 6 மாதத்தில் 3000 தேவாலயங்கள் தாக்கப்பட்டது, தமிழகத் தேர்தல், நாடாளுமன்ற தேர்தலில் நம் கடமை ஆ்உசடிக்யோaஉந வட்டி விகிதம், ஸ்டேன்சாமி சிறையில் சித்ரவதை, பில்கிட் பாறு குற்றவாளிகளை கும்பிடுவது போன்றவற்றை விளக்கி நம் கன்முன்னே நிறுத்தினார்.

எல்.ஐ.சி., வங்கி கூட்டுப்போராட்டம், பெட்ரோல், டீசல் சிலிண்டர் விலை உயர்வு, டீடேெ்நே ஞவயகக க்கு பணி நேரம் இரவு 2 மணி வரை, தேசிய மகளிர் ஆணையம், காவல்

துறையில் உயர் பெண் அதிகாரிக்கு ஏற்பட்ட பாலியில் வன்கொடுமை, மாற்று திறனாளி நடைபயணம், சூயஸ் எதிர்ப்பு, பெண்களை அணி திரட்டுவது, ஆணவக்கொலை உள்ளிட்ட ஏராளமான செய்திகளை கனத்த இதயத்தோடு நாம் கவனிக்க வேண்டியதாயிற்று.

17 முறை இரத்த தானம் செய்த விருதுநகர் வேலுமணியும், 14 முறை இரத்த தானம் செய்த மயிலாடுதுறை ராஜலட்சுமியும், கரூர் செல்வராணியும் பாராட்டப்பட்டனர். நம்மில் கூட சாதி மறுப்பை ஏற்க முடியாது, வரதட்சணை வாங்குவேன் என்று கூறிய தோழிகளும் இருந்ததை புரிந்து கொள்ள வேண்டும்.

மூத்ததோழி : விஜயாஜானகிராமன், வயது 80, சென்னை இளம் தோழி : சசி, வயது 19, கடலூர் அலைஅலையாக இளம் தோழிகள் கலந்துன கொண்டது நம்பிக்கை நட்சத்திரங்களாக தெரிந்தது.

3 திருநங்கை தோழிகள் பிரதிநிதிகளாக கலந்து கொண்டது நம் பயணத்தின் மைல் கல்லாக இருந்தது. திருவண்ணாமலை பழங்குடியின தோழி தன்னை பிரதிநிதியாக தேர்ந்தெடுத்து மேடையேற்றியதை ஆனந்த கண்ணீரோடு எங்களை உயரக்கொண்டு செல்லும் அமைப்பு ஹஜனுறுஹ மட்டுமே என கண்ணீர் வடித்தார். எல்லாற்றிற்கும் சமீப காலமாக அனைத்து ஊடகங்களிலும் விவாதிக்கப்பட்டு வரும் கள்ளக்குறிச்சி ஸ்ரீமதியின் தாய் செல்வி, ஜெய்பீம் பட உண்மை நாயகி பார்வதிஅம்மாள், திருவாரூர் நந்தினி, துடியலூர் மாணவியின் தாயார், வடசென்னை இந்துமதி, கிருஷ்ணகிரி நந்தினி, தஞ்சை சிறுமி, கடலூர் தேவகி போன்றவர்களை மேடையேற்றி உங்களுக்கு நாங்கள் இருக்கிறோம் என்ற நம்பிக்கையையும், பார்வையாளர்களின் நெஞ்சில் கனத்த இதயத்தோடு கண்ணீரையும் வர வைத்தது.

மாநாட்டில் ஏராளமான சமூக நலனுக்கான விவாதங்களும், தொகுப்புரையும் வழங்கப்பட்டது. தொகுப்புரையில் : குழந்தை திருமணத்தை தடுக்க முயன்ற ஆட்சியரை முற்றகையிட சென்ற மக்களை பார்த்தவுடன் ஆட்சியர் அழைத்தது, நம் ஹஜனுறுஹஎன்பதின் மூலம் நாம் சமூக நலனில் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை உலகிற்கு பறைசாற்ற முடிந்தது. மாநில நிர்வாகிகள் தேர்வு சிறப்புடன் ஒருமித்த கருத்துடன் நடைபெற்று மீண்டும் தலைவராக தோழர் வாலண்டினா அவர்களும், பொதுச்செயலாளராக தோழர் ராதிகா அவர்களும், பொருளாளராக தோழர் பிரமிளா அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இறுதியாக நிறைவுரையாற்ற மத்தியக்குழு உறுப்பினர் தோழர் உ. வாசுகி அவர்கள் அவருக்கே உரிய நகைச்சுவை உணர்வோடு இளம் தோழர்களின் பசு மரத்தாணியாக பதியுமாறு விள்ளத்தை கூறி அனைவரையும் உற்சாகக் கடலில் ஆழ்த்தினார்.

ஸ்தாபனத்தில் பதவி என்பது ஒரு பொறுப்பு.

அதில் உரிமையும், கடமையும் நாணயத்தின் இரு பக்கங்கள் போல் இருந்து செயல்பட வேண்டும். ஸ்தாபனம் என்பது ஒரு தொடர்ச்சி. அது இயங்கி கொண்டே இருக்க வேண்டும். மாவோ கூறியதுபோல் ஓடுகிற நீர் பாசி பிடிக்கிறது. கதவின் கீல் துருப்பிடிக்கிறது அதுபோல் ஸ்தாபனமும் நாமும் இயங்கிக்கொண்டே இருக்கவேண்டும். பொறுப்பில் இருப்பவர்கள் தங்கள் தரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும். விட்டு கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். நாம் அனைவரும் ஒன்று திரண்டு இந்த மதவெறி, மதவாத பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ். இடமிருந்து இந்தியாவை மீட்க போராட வேண்டும். அதை நோக்கி நாம் பயணிக்க வேண்டும் என கூறி நிறைவுரை செய்தார்.

மாநில மாநாட்டிற்கு வாழ்த்துரை வழங்க தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு வாய்ப்பு வழங்கிய அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க பொறுப்பாளர்களுக்கும், அந்த வாய்ப்பில் என்னை வாழ்த்துரை வழங்க அனுப்பிய மாநில தலைமைக்கும் , நிதி வழங்கி ஹஜனுறுஹ வுடன் நம் சகோதர பாசத்தை அதிகப்படுத்துவதற்கும் இது ஒரு வாய்ப்பாக கிடைத்தது. கடைக்கோடியில் இருக்கும் ஒரு சகோதரிகூட எம் சமூகத்திற்கான அறப்போராட்டத்தில் என் பங்கும் இருக்க வேண்டும் என குழந்தைகளோடு கலந்து கொண்டதை மிகப்பெரிய பேறாக எண்ணி உவகை கொள்கிறேன். நோபல் பரிசுக்கு இணையான வாய்ப்பை கொடுத்து இந்த சமூகத்தில் நாம் ஆற்ற வேண்டிய பணி ஏராளமாக இருக்கிறது என உணர்த்திய மாநில தலைமைக்கு மீண்டும் மனமாற நன்றி கூறுகிறேன். ●

# அஞ்சலி

**தோழர் வேணுகோபால், விக்டோரியா மகாராணி மற்றும் தோழர்.ஆசைத்தம்பி**

*அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து கொள்கிறேன். நாகை மாவட்டத்தின் அரசு ஊழியர் சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த தோழர்.அமரர்.ஆர்.எம்.கே.டி.யுடன் இணைந்து அரும்பணியாற்றியவர். அடிமைத்தனம் நிறைந்த நீதி த்துறையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை பட்டொளி வீசி பறக்க விட்டவர்.பின்னர் நீதித்துறை ஊழியர் சங்கம் உருவாக பாடுபட்டவர். உயிர் மூச்சு பிரியும் வரை சமூகப்பணியாற்றியவர் . ஆசை என்று பெயர் இருந்தாலும் முறுக்கு மீசை ரோடு கம்பீரமாக வலம் வருவார். நெருங்கிய குடும்ப நண்பரும் சக நிர்வாகியாக செயல்பட்ட தோழர் பொ. ஆசைத்தம்பி, அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாவட்டப் பொருளாளர் (முன்னாள் நாகை மாட்ட அரசு ஊழியர் சங்க பொருளாளர்/முன்னாள் நாகை மாவட்ட நீதித்துறை ஊழியர் சங்கத் தலைவர்) நேற்று இரவு காலமானார். தோழரின் மறைவு மிகுந்த மனவேதனை அளிக்கிறது. அவரது மறைவிற்கு செவ்வணக்கம் அஞ்சலி. அவரது மறைவால் துயருரும் அவரது மனைவி மகன் மகள்கள் உறவினர்கள் நண்பர்கள் தோழர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். தோழரின் இறுதி நிகழ்வுகள் வாணக்காரத் தெரு (அந்திக்கடை அருகில்) கடைவீதி நாகப்பட்டினம் அவரது இல்லத்தில் இன்று (13.9.2022) மாலை 3 மணியளவில் நடைபெற உள்ளது.* ●

**கவிதை**

# என்றென்றும் புன்னகை!

**- ஜிஜி**

சிலையின் தலையில்
சம்மட்டியால் அடித்தான் அவன்.
தலை தனியே போடீநு
விழுந்தது.
தலையை எடுத்துப் பார்த்தான்.
காந்தி சாந்தமாக
சிரித்துக் கொண்டிருந்தார்.
கோபம் பொத்துக் கொண்டு வர
மீண்டும் சம்மட்டியை எடுத்து
மூக்கில் மேல் அடித்தான் - இப்போது
முகம் இரண்டானது
மூக்கின் அடியில் உடைந்த
பாகத்தை எடுத்துப்பார்த்தான்
இப்போதும் அவரின் உதடுகளில்
புன்னகை தவடிநந்தது.
சிலையை உடைக்கச் சொன்னவர்
`சிறப்பாகச் செடீநுதீர்` என்று
சொல்லி
பத்து ஐநுhறு ரூபாடீநு தாள்களை
அவன் கையில் திணித்தார்.
ஐநுhறு ரூபாடீநு தாள்களை
வாங்கிப்
பார்த்தபோது அங்கேயும்
காந்திஜி சிரித்துக் கொண்டிருந்தார்.
அவரின் சிரிப்பு
'இப்போது என்ன
செடீநுயப்போகிறாடீநு?'
என்று கேலி செடீநுவது போல்
தெரிந்தது!

# அக்டோபர் 13 தியாகி சங்கரலிங்கனார் நினைவு நாள்

**- பெரணமல்லூர் சேகரன்**

விருதுநகர் மாவட்டத்தில் வசித்து வந்த சங்கரலிங்கனார் காங்கிரஸ் அரசின் முன்பாக 1956ஆம் ஆண்டு ஜூலையில் 12 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தார். தனியாக மொழிவழி மாகாணம் வேண்டும். சென்னை மாகாணத்திற்குத் "தமிழ்நாடு" என்று பெயர் சூட்ட வேண்டும். அரசியல் தலைவர்கள் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சாதாரண மக்களைப் போல் வாழ வேண்டும். தேர்தல் முறையில் மாற்றம் வேண்டும். தொழில்கல்வி, இந்தியா முழுவதும் மதுவிலக்கு என்று பன்னிரெண்டு கோரிக்கைகளுடன், சூலை 27ந் தேதி சூலக்கரை மேட்டில் தனியாளாக உண்ணாவிரதத்தைத் துவக்கினார். அப்போது அந்த இடம் விருதுநகரிலிருந்து தூரத்தில் ஆட்கள் நடமாட்டமில்லாத பகுதியாக இருந்ததால், கம்யூனிஸ்ட் கட்சியினரின் ஆலோசனையின் பேரில் விருதுநகர் தேசபந்து மைதானத்தில் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். அப்போதிருந்த காங்கிரஸ் அரசு சங்கரலிங்கனாரின் கோரிக்கைகளை ஏற்கவில்லை.

அதற்குள் சங்கரலிங்கனாரின் உண்ணாவிரதம் பல சலசலப்புகளை ஏற்படுத்த ஆரம்பித்துவிட்டது. ம.பொ.சிவஞானம்., அண்ணா, காமராசர், ஜீவானந்தம் உட்பட பல தலைவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தச் சொல்லிக் கோரிக்கை விடுத்தனர், இருந்தும் உண்ணாவிரதம் நிறுத்தப்படவில்லை. நாளாக நாளாகச் சங்கரலிங்கனாரின் உடல்நிலை மோசமானது. விருதுநகருக்குச் சென்று அவரைச் சந்தித்துப் பேசினார் அண்ணா. அப்போது தொடர்ந்து மூன்று கடிதங்களை எழுதினார் சங்கரலிங்கனார்.

“பொதுஜனங்களின் விருப்பத்திற்கு மாறாகத் தவறான வழியில், கண்மூடித்தனமாகப் போய்க் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சி ஒழிந்தே தீரும். அறிவுத் திறன் இருந்தால் திருத்திக்கொள்ளட்டும்” என்று ‘எச்சரிக்கையுடன்’ எழுதியிருக்கிறார். 76 நாட்கள்வரை அவருடைய உண்ணாவிரதம் தொடர்ந்தது. தமிழகத்தில் அப்போதிருந்த தின இதழ்களில் இதுகுறித்த செய்திகள் தினமும் வெளிவந்து கொண்டிருந்தன.

அக்டோபர் 10ந் தேதி அன்று நிலைமை மோசமாகி சங்கரலிங்கனார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் 1956ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ஆம் நாள் அன்று அவருடைய உயிர் பிரிந்தது. அப்போது சென்னை மாகாணத்தில் இந்தச் செய்தி பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சென்னை நகரக் கல்லூரி மாணவர்கள் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தனர். மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையிலிருந்த சங்கரலிங்கனாரின் உடல் மதுரை தத்தனேரியில் அடக்கம் செய்யப்பட்டபோது பல கட்சித் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

இறந்தபின் தன் உடலைக் கம்யூனிஸ்ட் கட்சியினரிடம் ஒப்படைத்து, இறுதிமரியாதை செய்ய வேண்டும் என்று தெளிவாகக் கூறியிருந்தார் சங்கரலிங்கனார். அதையொட்டி அவரை அடக்கம் செய்வதில் துணை நின்றவர்கள் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கே. டி. கே. தங்கமணியும், கே. பி. ஜானகியம்மாவும் மருத்துவமனைக்குச் சென்று, பதிவேட்டில் கையெழுத்திட்டு, உடலைப் பெற்றனர். மதுரைத் தத்தனேரி சுடுகாட்டில்

சங்கரலிங்கனார் உடல் தகனம் செய்யப்பட்டது. தியாகி சங்கரலிங்கனாரின் நினைவைப் போற்றும் வகையில், தமிழக அரசால் விருதுநகர் கல்லூரி சாலையில் நகராட்சி பூங்கா அருகில் 76 லட்சம் செலவில், மணிமண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

சங்கரலிங்கனாரின் 'தமிழ்நாடு' பெயர் சூட்டுவது குறித்த கோரிக்கைக்கு அவருடைய மறைவுக்குப் பிறகு அழுத்தம் கொடுக்கப்பட்டு பல இயக்கங்கள் அந்தக் கோரிக்கைகளை முன்வைத்தன.

1962ஆம் ஆண்டு மார்ச்சில் நாடாளுமன்றத்தில் 'தமிழ்நாடு' கோரிக்கைக்காகத் தனி மசோதாவே கொண்டு வந்தபோது, அது தள்ளுபடி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 1964 ஜனவரியில் சென்னை மாநில சட்டமன்றத்தில், தமிழ்நாடு பெயர் சூட்டத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோதும் அத்தீர்மானம் தள்ளுபடி செய்யப்பட்டது.

பின்னாளில் ஆட்சிக்கு வந்த அண்ணாவின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகத்தின் அரசு 1967, ஏப்ரல் 14 அன்று சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை 'தமிழக அரசு' ஆக மாறியது. அதன் தொடர்ச்சியாக, 1968 ஜூலை 18இல் சென்னை மாநிலத்தைத் 'தமிழ்நாடு' என பெயர் மாற்றம் செய்யும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. பின்னர் 1968ஆம் ஆண்டு நவம்பர் 23 இல் தமிழ்நாடு பெயர் மாற்ற மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. இதையடுத்து 1968ஆம் ஆண்டு டிசம்பர் 1இல் தமிழ்நாடு முழுக்கப் பெயர் மாற்றம் விழாவாகக் கொண்டாடப்பட்டபோது "சங்கரலிங்கனாருக்கு நன்றியும் வணக்கமும்" தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய தியாகத்தின் பின்னணியில் பெற்ற மொழியுரிமையைக் காலில் போட்டு மிதிக்கிறது ஒன்றிய அரசு. ஒன்றிய அரசின் ஒரே மொழி எனும் மக்கள் விரோதக் கொள்கையை முறியடிக்க வேண்டியது அனைவரின் அவசியக் கடமை.

●

# கவிதை

## சொத்தில் சம உரிமை

சொத்து இரண்டாக
பிரிக்கப்படுகிறது....
பத்துக்குப் பத்து
சமையற்கட்டில்
கரண்டி, தட்டு,
குக்கர், மிக்சி,
கிரைண்டர்
இத்யாதிகள்
என் தோழிக்காம்........!

## கல்லானாலும், புல்லானாலும்

அதிகாலை விழித்து,
குளித்து,
துளசிமாடம் சுற்றி,
காபி கலந்து போனால்
கல் தூங்கிக்கொண்டு.....!
சமைத்து,
குழந்தைகளுக்கு
சீருடை பூட்டி,
கையசைத்த பிறகு
எடுப்பானில் உணவடைத்து
நீட்டியதை வாங்கிக்கொண்டு
வார்த்தைகளற்று நகர்கிறது
வாகனம்.....
ஐந்து நிமிட தாமதத்திற்கு
புல்லுக்கு கோபமாம்.....!

- ஆர்.நடராஜன்

# ஜேக்டோ – ஜியோ மாநாட்டு விளக்கக் கூட்டமும் பணிநிறைவு பாராட்டு விழாவும்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்ட மையத்தின் சார்பில் ஜாக்டோ ஜியோ வாழ்வாதார நம்பிக்கை மாநில மாநாட்டு விளக்க கூட்டம் மாவட்ட தலைவர் முனைவர் பால் பாண்டி தலைமையில் 2.10 .2022 காலை 10 மணிக்கு ஆசிரியர் இல்லத்தில் நடைபெற்றது. மாவட்ட துணை தலைவர்கள் சகாதேவன், ஜீவானந்தம், சிவசங்கர், மாவட்ட இணை செயலாளர்கள் பாபு, அமுதவல்லி, அல்போன்ஸ், மாவட்ட மகளிர் துணை குழுக்குழு அமைப்பாளர் சத்தியவாணி, மாநில செயற்குழு உறுப்பினர் ராம்ராஜ் ஆகியோர் முன்னிலை வைகித்தார்கள். மாவட்ட செயலாளர் பொ. பழனிச்சாமி வரவேற்புரை ஆற்றினார். சிஐடியு திருச்சி மாவட்ட செயலாளர் எஸ் ரங்கராஜ் கூட்டத்தினை முறைப்படி துவக்கி வைத்து துவக்கவுரையாற்றினார். தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் கூட்டமைப்பின் மாவட்ட தலைவர் சிராஜுதின், ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர் சந்திரசேகரன், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் சி ஆரோக்கியராஜ், மாநில துணைத் தலைவர்கள் தோழர் ஞானதம்பி, ஏ. பெரியசாமி, செல்வராணி மாநில செயலாளர் சா. கோதண்டபாணி, தமிழ்நாடு கண் மருத்துவ உதவியாளர் சங்கத்தின் மாநில பொருளாளர் அன்பழகன், தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் மாநில செயலாளர் எம்.வி. செந்தமிழ் செல்வன், மாவட்ட தலைவர் மதிவாணன், சின்னசாமி, தமிழ்நாடு சத்துணவு அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் சாமிநாதன், மாவட்ட செயலாளர் கே.எம்.ராஜேந்திரன், தமிழ்நாடு அரசு புள்ளிஇயல் சார்நிலை அலுவலர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தினகரன், மருந்தாளுநர் சங்க மாநில நிர்வாகிகள் பாஸ்கரன், செந்தில் மின்வாரிய ஊழியர் சின்னசாமி, நெடுஞ்சாலை துறை ஊழியர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரெங்கசாமி ஆகியோர் வாழ்த்துரை மற்றும் மாவட்ட பொருளாளர் சுந்தர்ராஜ் லால்குடி வட்டத் தலைவர் ஜெயராஜ் அவர்களை பாராட்டி பாராட்டுரை வழங்கினார்கள். மாநில பொதுச் செயலாளர் ஆ.செல்வம் ஜாக்டோ ஜியோ மாநாட்டு விளக்கவுரை குறித்து விரிவாக உரையாற்றினார். மாநில தலைவர் மு. அன்பரசு ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாகவும் மாநாட்டில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும் எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். மாநில பிரதிநிதித்து பேரவைக்கு முன்பாக அரசு ஊழியர்களின் நீண்ட நாள் நிலுவை கோரிக்கைகளான சிபிஎஸ் ரத்து செய்ய வேண்டும், சத்துணவு அங்கன்வாடி உள்ளிட்ட சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு காலம் முறை ஊதியம் வழங்க வேண்டும், நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளரின் 41 மாதம் பணி நீக்க காலத்தை பணிக்காலமாக கருத வேண்டும், நிறுத்தப்பட்ட சரண்டர் உடனடியாக வழங்க வேண்டும், மத்திய அரசு வழங்கியுள்ள அகவிலைப்படி உயர்வினை உடனடியாக வழங்க வேண்டும் உள்ளிட்ட நிலுவை கோரிக்கைகளை உடனடியாக அரசு வழங்க வேண்டும், இல்லை என்று சொன்னால் வருகிற டிசம்பரில் சேலத்தில் நடைபெறும் மாநில பிரதிநிதித்து பேரவையில் அடுத்த



கட்ட இயக்கங்கள் குறித்து முடியும் மேற்கொள்ளப்படும் என்றும் எடுத்துரைத்தார். கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் சுந்தர்ராஜ், லால்குடி வட்டத் தலைவர் தோழர் ஜெயராஜ் ஆகியோர் ஏற்புரை வழங்கினார்கள்.

இறுதியாக தோழர் மாவட்ட இணைச் செயலாளர் அமுதவல்லி நன்றி கூறினார்.

கூட்டத்தில் தமிழ்நாடு அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவ விடுதி காப்பக உதவியாளர்கள் 20 பேர் நமது சங்கத்தில் இணைந்து உறுப்பினர் சந்தா செலுத்தி உறுப்பினர் அட்டையை மாநில தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் பெற்றுக் கொண்டார்கள்.

பணி நிறைவு பெற்ற மாவட்ட பொருளாளர் தோழர் சுந்தர்ராஜ் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் அரசு ஊழியர் மாத இதழ் வளர்ச்சி நிதியாக ரூ.5000/- மாநில பொதுச் செயலாளரிடம் நன்கொடையாக வழங்கினார்.

கூட்டத்தில் அனைத்து துறை ஊழியர்களும், ஓய்வு பெற்ற சங்கத்தின் நிர்வாகிகளும், ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகிகள், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள், துறைவாரி தோழமை சங்க நிர்வாகிகள் மற்றும் மத்திய அரசு தொழிற்சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டார்கள். தோழமையுடன் முனைவர் கா. பால் பாண்டி, மாவட்ட தலைவர்,பொ.பழனிச்சாமி, மாவட்ட செயலாளர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

பணிநிறைவு பாராட்டு விழாவின் போது அரசு ஊழியர் மாத இதழ்க்கு நன்கொடை வழங்கும் நிகழ்வு.

# அரசு ஊழியர் இதழ் வளர்ச்சி நன்கொடை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்ட மையத்தின் சார்பில் ஜாக்டோ ஜியோ வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டு விளக்க கூட்டம் மற்றும் மாவட்ட பொருளாளர் தோழர் சுந்தர்ராஜ் மற்றும் லால்குடி வட்டக்கிளை தலைவர் தோழர் ஜெயராஜ் பணி நிறைவு பாராட்டு விழா 02.10.2022 அன்று மாவட்ட தலைவர் முனைவர் கா. பால் பாண்டி தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில தலைவர் தோழர் அன்பரசு, பொதுச் செயலாளர் தோழர் ஆ. செல்வம், மாநில, மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் துறைவாரி சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்து துறை ஊழியர்களும் கலந்து கொண்டு பாராட்டுகளையும் வாழ்த்துக்கள் தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ் அரசு ஊழியர் வளர்ச்சி நிதியாக ரூ.5000- திருச்சி மாவட்ட பொருளாளர் தோழர் சுந்தர்ராஜ் நன்கொடையாக மாநில பொதுச் செயலாளர் ஆ.செல்வத்திடம் வழங்கினார்.

**அஞ்சலி**



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கரூர் 3 வட்டக்கிளை செயலாளர் அன்புத் தோழர் கா.திருவேங்கடசாமி, (உதவி பொறியாளர் வேளாண்மை பொறியியல் துறை கரூர்) அவர்கள் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# முப்பெரும் விழா

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கிருஷ்ணகிரி மாவட்டம், 18.09.2022 அன்று ஞாயிற்றுக்கிழமை தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க கட்டிடத்தில் மகளிர் மாநில மாநாடு வரவேற்பு குழு நிறைவு விழா, ஜாக்டோ-ஜியோ வாழ்வாதார நம்பிக்கை மாநாடு விளக்க கூட்டம் மேனாள் மாவட்ட செயலாளர் தோழர். R.நடராஜன் அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா ஆகிய மூன்று பெரும் நிகழ்வுகள் முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்விற்கு மாவட்ட தலைவர் தோழர். B.சந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார், மாவட்ட செயலாளர் (பொ) தோழர். R.M.மஞ்சுளா அவர்கள் வரவேற்பு உரையாற்றினார். மாநில துணைத்தலைவர் தோழர். G.பழனியம்மாள் அவர்கள் துவக்கவுரையாற்றினார். மகளிர் மாநில மாநாட்டின் வரவேற்பு குழு பணிகள் குறித்தும், மாநாட்டின் முக்கியத்துவம் குறித்தும், இம்மாநாடு பெண் அரசு ஊழியர்கள் இடையே ஏற்படுத்திய தாக்கம் மற்றும் நம்பிக்கை குறித்தும், மேனாள் மாவட்ட செயலாளர் தோழர். R.நடராஜன் அவர்களின் சங்க பணிகள் குறித்தும், மாநில மகளிர் அமைப்பாளர் தோழர். சி.பரமேஸ்வரி அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் தோழர். தெ.வாசுகி அவர்களும், மாநில துணைத்தலைவர் தோழர். மு.செல்வராணி அவர்களும், மாநில செயலாளர்கள் தோழர். சா.டேனியல்ஜெயசிங், மற்றும் தோழர். சா.கோதண்டபாணி ஆகிய தோழர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். தர்மபுரி மாவட்ட தலைவர் தோழர் M.சுருளிநாதன் அவர்களும், மாவட்ட செயலாளர் தோழர். A.சேகர் அவர்களும், தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கத்தின் மாநில தலைவர் தோழர். சேகர் அவர்களும், வட்ட கிளைகள் சார்பாகவும் மேனாள் மாவட்ட செயலாளர் தோழர். R.நடராஜன் அவர்களின் சங்கப் பணிகளை பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்கள்.

தோழர். R. நடராஜன், மேனாள் மாவட்ட செயலாளர் அவர்கள் வாழ்த்துரைகளுக்கு ஏற்புரையாக தனது சங்கப் பயணம் குறித்தும், அனுபவங்கள் குறித்தும் பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து அரசு ஊழியர் சங்கத்திற்கும், பொதுவுடமை பணிகளுக்கும் நான் தொடர்ந்து பயணிப்பேன் என்று தனது ஏற்புரையில் உரையாற்றினார். மேலும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு ஊழியர் சங்கத்திற்கான சொந்த கட்டடம்

அமைப்பதற்காக தனது சார்பாக நிதியாக ரூபாய் 50,000 வழங்கி சிறப்பித்துள்ளார்.

மாநில பொதுச் செயலாளர் தோழர் ஆ.செல்வம் அவர்கள் முப்பெரும் விழா குறித்து சிறப்புரையாற்றினார். நிறைவாக மாநில தலைவர் தோழர் மு.அன்பரசு அவர்கள் மகளிர் மாநில மாநாட்டின் சிறப்புகள் குறித்தும், பெண் அரசு ஊழியர்களிடையே ஏற்படுத்திய தாக்கம் குறித்தும், ஜாக்டோ-ஜியோ வாழ்வாதார நம்பிக்கை மாநாடு குறித்தும், தோழர் R. நடராஜன் அவர்களுடைய சங்கப் பணிகள் குறித்தும் வாழ்த்தி நிறைவுப் பேருரையாற்றினார். மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர். K. ஜெகதாம்பிகா அவர்கள் நன்றி உரையாற்றி முப்பெரும் விழாவினை நிறைவு செய்தார்.. இவ்விழாவில் 54 பெண் தோழர்கள் உட்பட மொத்தம் 126 தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

●



# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

(பதிவு எண்.237/84)

## மாநில பிரதிநிதித்துவப் பேரவை

17 டிசம்பர் 2022 - சேலம்

### வரவேற்புக் குழு

97/66, 3வது மாடி பார்க் தெரு, செரி ரோடு, சேலம்-636001

செல்: 9994388974,9442216621 E-mail : tngeastatergbsalem@gmail.com

வரவேற்புக்குழு தலைவர்
**கோ.சுகுமார்**
மேனாள் மாநில துணைத்தலைவர், TNGEA

மதிப்புறு தலைவர்
**வே.அர்த்தனாரி**
மாநில துணைத் தலைவர், TNROA

நிர்வாகத் தலைவர்
**ந.திருவேரங்கன்**
மாநில துணைத் தலைவர், TNRDOA
மாவட்டத் தலைவர், TNGEA

ஆலோசகர்
**இரா.சுப்பிரமணியன்**
மாநில துணைத் தலைவர், TNGPA

செயலாளர்
**பு. சுரேஷ்**
மாவட்டச் செயலாளர்,TNGEA

நிதிக் குழு

**வெ.செல்வம்**
மாவட்டப் பொருளாளர்,TNGEA

**அ.சண்முகம்**
மாவட்ட துணைத் தலைவர் ,TNGEA

**மா.இராணி**
மாவட்ட துணைத் தலைவர்,TNGEA

---

**ஒருங்கிணைப்பாளர்கள்**

**பி.ஜே.கண்ணன்**
மாவட்டத் தலைவர்,TNRDOA

**த.செந்தில்குமார்**
மாநிலத் தலைவர், TNJEA

**ந.வேலாயுதம்**
மாநில துணைத் தலைவர்,TNGCEA

**நிர்வாகக் குழு**

மாவட்ட துணைத் தலைவர்கள்

**எம்.முத்துகுமரன்**
**வீ.வள்ளிதேவி**

மாவட்ட இணைச் செயலாளர்கள்

**நா.திருநாவுக்கரசு**
**அ.அமராவதி**
**சி.இரமேஷ்**
**து.சிங்கராயன்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின்2022 டிசம்பர் 17 இல் சேலத்தில் நடைபெறும் மாநில பிரதிநிதித்துவ பேரவைக்கான வரவேற்பு குழு அமைப்பு கூட்டம் 25.9.22 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் சேலம் மாநகராட்சி பல்நோக்கு அரங்கில் நடைபெற்றது. வந்த வரவேற்பு குழு அமைப்பு கூட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட துணை தலைவர் சண்முகம் தலைமை வகித்தார். துவக்க நிகழ்வாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியினை பொதுச் செயலாளர் தோழர் செல்வம் அவர்களும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியினை அரசு ஊழியர் சங்க மாநில தலைவரும்,அகில இந்திய மாநில அரசு ஊழியர் sammelna துணைப் பொதுச் செயலாளருமான தோழர் அன்பரசு அவர்களும் ஏற்றி வைத்தனர். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வரவேற்பு குழு கூட்டத்தை சிறப்பாக நடத்தின அனைத்து வகையான வழிகாட்டுதல்களையும் செய்திட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர்அன்பு தோழர் திருவரங்கன் அவர்களின் தாயாரின் மறைவிற்கு மாவட்ட இணை செயலாளர் தோழர் தோழர் திருநாவுக்கரசு அஞ்சலி தீர்மானத்தை முன் மொழிய இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் வரவேற்பு குழு அமைப்பு கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் சுரேஷ் வரவேற்று பேசினார்.

மாநில பிரதிநிதித்துவ பேரவையின் வரவேற்பு குழு தலைவராக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில துணைத்தலைவர் தோழர் சுகுமார் அவர்களும், மதிப்புரு தலைவராக வருவாய் துறை அலுவலர் சங்க மாநிலத் துணைத் தலைவர் தோழர் அர்த்தனாரி அவர்களும், நிர்வாக குழு தலைவராக தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர் சங்கத்தின் மாநில துணைத்தலைவரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவருமான தோழர் திருவரங்கன் அவர்களும் ஆலோசகராக , தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை ஓய்வூதியர் சங்க மற்றும்தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாநிலத் துணைத் தலைவர் தோழர் ஆர். சுப்பிரமணியம் அவர்களும், வரவேற்பு குழு செயலாளர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க சேலம் மாவட்ட செயலாளர் சுரேஷ் அவர்களும், வரவேற்பு குழு நிதி குழுவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க சேலம் மாவட்ட பொருளாளர் செல்வம் அவர்களும், மாவட்ட துணை தலைவர்கள் தோழர் சண்முகம், தோழர் ராணி அவர்களும் வரவேற்பு குழு துணை தலைவர்களாக தோழமை சங்கங்களின் மாவட்டத் தலைவர்களும் வரவேற்பு குழு இணைச் செயலாளராக தோழமை சங்கங்களின் மாவட்ட

செயலாளர்களும், வரவேற்பு ஒருங்கிணைப்பாளர்களாக தோழமை சங்க மாநில நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் .

இந்த வரவேற்பு குழு அமைப்பு கூட்டத்தில் தர்மபுரி மாவட்ட செயலாளர் சேகர் அவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்கி பேரவை முதற்கட்ட நிதியாக ரூபாய் பத்தாயிரமும், கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் தோழர் மகாலிங்கம் பங்கேற்று வாழ்த்துரை வழங்கி பேரவை முதற்கட்ட நிதியாக ரூபாய் 3000மும் வழங்கினர். நாமக்கல் மாவட்ட செயலாளர் தோழர் முருகேசன் அவர்களும், மதுரை மாவட்ட செயலாளர் தோழர் நீதி ராஜா அவர்களும், திருநெல்வேலி மாவட்ட தலைவர் தோழர் பார்த்தசாரதி அவர்களும், வாழ்த்துரை வழங்கினர் . மற்றும் மாநில நிர்வாகிகளும் வாழ்த்துரை வழங்கினர். பேரவையின் நோக்கங்கள் குறித்து மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் தோழர்சீனிவாசன் அவர்களும், மாநில பொருளாளர் தோழர் பாஸ்கரன் அவர்களும், பொதுச் செயலாளர் தோழர்செல்வம் அவர்களும் சிறப்புரையாற்றினார்கள். வரவேற்பு குழு அமைப்பு கூட்ட நிறைவுறையாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில தலைவர் தோழர் அன்பரசு அவர்கள் நிறைவுறையாற்றினார். . இந்தக் கூட்டத்தில் அனைத்து துறை வாரிச் சங்க நிர்வாகிகளும் பங்கேற்று வாழ்த்துரை வழங்கி மாநில பிரதிநிதித்துவ பேரவை முதற்கட்டநிதியாக மொத்தம் ரூபாய் ஒரு லட்சத்து 76 ஆயிரம் வழங்கினார்கள். இறுதியாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட பொருளாளர் தோழர் செல்வம் நன்றி கூறி முடித்தார்.

**மாநில பிரதிநிதித்துவப் பேரவை இலட்சினை வெளியீடு**




*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில பிரதிநிதித்துவப் பேரவை இலட்சினை வெளியீடு. அன்று (01:10:2022)மாலை,C.I.T.U. கூட்ட அரங்கில் நடைபெற்ற வரவேற்புக்குழு முதல் கூட்டத்தில், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவ பேரவைக்கான இலட்சினையை மாநில தலைவர் அன்பரசு வெளியிட்டார்.*

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவ பேரவை வரும் டிசம்பர் 17-ஆம் தேதி சேலம் மாநகரில் நடைபெறவுள்ளது. இன்றைய காலக்கட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த அரசு ஊழியர்களின் கோரிக்கைகளுக்கான முக்கிய முடிவுகள் எடுத்திடும் பேரவையாக இருப்பதால் அதனை சிறப்பாக நடத்துவது குறித்து உரையாற்றி, மாநிலப் பேரவை இலட்சினையை மாநில தலைவர் அன்பரசு வெளியிட்டார். வரவேற்பு குழு தலைவர் ஜி.சுகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னதாக நிர்வாக தலைவர் ந.திருவேரங்கன் வரவேற்புரை ஆற்றினார்.*

*வரவேற்பு குழு கூட்டத்தில் அரசு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் மு.அன்பரசு, துணைப்பொதுசெயலாளர் மு.சீனிவாசன் பங்கேற்று பேசினார்கள். அவர்கள் பேசும்போது இன்றைய சூழ்நிலையில் அரசு ஊழியர்களின் எண்ணற்ற கோரிக்கைகளை விவாதித்தது முடிவு எடுக்கும் நிலைக்கு உள்ளோம் எனவும், அரசு ஊழியர்களின் உரிமைகள் மற்றும் பணப்பலன்கள் மீளப்பெறும் வகையில் மாநில பிரதிநிதித்துவப் பேரவை அமையும் எனவும், 1500க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் தமிழக அரசின் அனைத்து துறைகளில் இருந்தும் பங்கேற்க உள்ளனர் எனவும் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் நிர்வாக ஒருங்கிணைப்பாளர் பி.ஜே. கண்ணன் சிஐடியு மாநில துணைத் தலைவர் எஸ். கே.தியாகராஜன், ஓய்வூதியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் ஆர்.சுப்ரமணியம், சிறப்புரையாற்றினார்கள். வரவேற்புகுழு செயலாளர் சேலம் மாவட்ட செயலாளர் பு.சுரேஷ், நிதிக்குழு உறுப்பினர்களான சேலம் மாவட்ட நிர்வாகிகள் ராணி, சண்முகம் உள்ளடக்கிய வரவேற்பபுக்குழுவினர் பங்கேற்றனர். அரசு ஊழியர் சங்க மாவட்ட பொருளாளர் வே.செல்வம் நன்றியுரை ஆற்றினார்.*

# தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்க
# புதிய நிர்வாகிகளை வாழ்த்துகிறோம்


வெங்கடேசன். கு
தலைவர்


ஹரிசங்கர். சு
செயலாளர்


லெனின். இரா
இணைச் செயலாளர்
(பொது)


ஜீவன். அ
இணைச் செயலாளர்
(விளையாட்டு மற்றும் பண்பாடு)


பிரபா. சே
பொருளாளர்

அகரம் இப்போ சிகரம் ஆச்சு!

## சேர்ந்து பறக்கலாம் வாருங்கள்... தோழமைச் சிறகுகளே!

தங்கம் என்று
சொல்லிக்கொண்டவை எல்லாம்
தகரம் என்று
தரணிக்கு தெரிந்த பின்னர்
அகரம் இப்போ சிகரம் ஆச்சு!

சொந்த நலன்
சுயநலனுக்காகவெல்லாம்
சங்கத்தை தலைகுனிய வைத்து
தலைமைச் செயலக சமூகத்தை
நிலைகுலைய வைத்த
கதையெல்லாம்
நேற்றோடு போயே போச்சு!

புழுதி பறக்கும் போராட்ட களத்தில்
உறுதியோடு உரிமைக்காக
குருதி சிந்த பிற சங்கங்கள்
போராடிக் கொண்டிருக்க,
துரும்பைக்கூட
கிள்ளிப் போடாமல்
புழக்கடை வழியே
பூங்கொத்தை ஏந்தி
நன்றி சொல்ல முண்டியத்த
நயவஞ்சகத்திற்கெல்லாம்
தண்டனை கிடைச்சாச்சு!

பாரம்பரியம் மிக்க சங்கம்!
தனித்துவம் மிக்க சங்கம் !
போர்க்குணம் மிக்க சங்கம்!
தலைமைச் செயலக சங்கம்!

2003ல் ஜாக்டோ ஜியோ
அறிவித்த நாளுக்கு
ஒருநாள் முன்னதாகவே
வேலை நிறுத்தத்தை
கையிலெடுத்த
தலைமைச் செயலக
ஊழியர்களின் போர்க்குணம்
சங்க வரலாறுகளில்
சாதனை படைத்த நிகழ்வாகும்!

நூறு சங்கங்களின் வலிமை
தலைமை செயலக சங்கத்தின்
தனித்துவமிக்க பெருமை!

எல்லா சங்கங்களும் சேர்ந்து
தொண்டை கிழிய கத்தினாலும்
அரசுக்கு கேட்காமல் போகும்;
மெல்லியதாய் ரெண்டு வார்த்தை
தலைமைச் செயலக சங்கம்
துல்லியமாய் சொன்னால் போதும்;
அரசுக்குப் போய்ச் சேரும்!

தெரிவு செய்யப்பட்டிருக்கும்
நிர்வாகிகள் ஊழியர் நலனில்
தெளிந்த பார்வை உள்ளவர்கள்!
பணிந்து போகும் தன்மையல்ல –
உரிமைகளை துணிந்து கேட்கும்
துணிவு உள்ளவர்கள்!

கிழக்கின் வழியே
இலக்கை அமைப்பவர்கள்!
வழக்குகளுக்கும்
அடக்குமுறைகளுக்கும்
ஒருபோதும் வளையாதவர்கள்!

ஜாக்டோ ஜியோ
கூட்டமைப்பின் சிங்கமாக,
தமிழக அரசு ஊழியர்
சமூகத்தின் அங்கமாக,
தலைமைச் செயலக சங்கத்தின்
தலைமை வாய்த்திருப்பது
எங்களுக்கு வலிமை!
உங்களுக்குப் பெருமை!
நாம் எல்லோரும்
ஒன்றிணைந்து நிற்பது
காலத்தின் கடமை!

சாதி மதப் பாகுபாடின்றி,
ஆண் பெண் பேதமின்றி,
சாதிக்கும் மனப்பான்மையோடு
எல்லோரும் எல்லாமும் பெற
கடமை செய்வோம் கலங்காமல்!
உரிமை கேட்போம் தயங்காமல்!

விடிகின்ற வானம் இருளும்
ஒளியுமாய்
சேர்ந்து பறக்கலாம் வாருங்கள்
தோழமைச் சிறகுகளே!

வாழ்த்துக்களுடன்...

(மு. அன்பரசு)
மாநிலத் தலைவர்

(ஆ. செல்வம்)
பொதுச் செயலாளர்

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com